# ஆதவன் எழுகிறான்

கல்வி, கலை இலக்கிய முத்திங்கள் மலர்



விலை; 7/-

★ செப்ரம்பர் — ஒக்டோபர் — நவம்பர் 1988 ★

மாணவ உலகின் வழிகாட்டி

# NIRU TUITION CENTRE, KONDAVIL.

## A/L 90 - Aug

கலை, வர்த்தக விஞ்ஞான வகுப்புகள்,

| | |
|---|---|
| பௌதிகவியல்: | திரு. சௌந்தி |
| இரசாயனவியல்: | திரு. செல்வா |
| தூய, பிரயோக கணிதம்: | திரு. கிருஷ்ணு |
| விலங்கியல்: | திரு. ஞானம் |
| தாவரவியல்: | திரு. பாலா |
| பொருளியல்: | திரு. சின்னத்தம்பி |
| கணக்கியல்: | திரு. மரியதாஸ் |
| வர்த்தகம்: | திரு. தேவா |
| புவியியல்: | திரு. வேலா |
| இந்துநாகரீகம்: | திருமதி அருள்நங்கை |
| அளவையியல்: | திரு. S. S. மனோகரன் |
| தமிழ்: | திரு. குழந்தை |
| அரசறிவியல்: | திரு. மஃறூப் |

தனித்துவம்மிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை:

5, 6, 7. 8. 9. 10, 11 ஆண்டுவரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

விபரங்கட்கு: நிரு டீயூசன் சென்ரர் கோண்டாவில்.

ஆதவன்

எழுகிறான்

உதயம்: 2 1988
ஒளி; 7

ஆலோசகர்:-
நா. குழந்தைவேலு
B. A. (Tamil SPL)
M.A.Q. (Cey)D.O.A.S.

நிர்வாக ஆசிரியர்:-
ந. அமிர்தலிங்கம்

ஆசிரியர்:-
மு. ரவீந்திரன்

துணை ஆசிரியர்:-
க. கண்ணதாசன்
ந. சத்தியபாலன்

நிர்வாக
உறுப்பினர்கள்:-
ந. கமலா
இ. அரசகுலசூரியன்
ஜே. லூசியன் மரியதாஸ்
சி. தர்மபாலன்
சு. சண்முககுமார்
கா. சசிதரன்
க. சர்வலோகராஜா
ச. சண்முகலிங்கம்

தொடர்பிற்கு:-
"ஆதவன் எழுகிறான்"
38, அம்பாள் வீதி,
நாயன்மார் கட்டு,
யாழ்ப்பாணம்.

செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே!
தவம் செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம் —
வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு.

## இதய கீதம் ......

சமத்துவ உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அறிவினை விசாலப்படுத்தி மனிதப் பிறவிக்குகந்த காரியங்களைச் செய்வதற்குத் தூண்டுகோலாயிருப்பதே உண்மையான கல்வி என்பது அறிஞர் டால்ஸ்டாயின் கருத்து.

கல்வி கற்று விட்டால் மட்டும் போதுமா; நாம் கற்ற கல்வியால் சமுதாயம் பயனுற வேண்டாமா, என்றெண்ணி செயல்படுபவர்கள் எத்தனை பேர்? ஏதோ செய்கின்றார்களே என்று எண்ணாமல் தட்டிப் பறிக்க முயய்கின்றார்களே அவர்களை எண்ணும் போது தான் வேதனை நெஞ்சை அழுத்துகின்றது. போகட்டும் விட்டுவிடுவோம்.

எங்கள் அன்பான வாசகர்களின் சிக்கலை தவிர்ப்பதற்காக "ஆதவன்" புதிய பல அம்சங்களுடன் "ஆதவன் எழுகிறான்" என்று பெயரில் மூன்று மாதங்களுக்கொரு முறை உங்கள் கரங்களில் தவழ்வான். பெயரில் மட்டுமே மாற்றம் ஆசிரியர் குழு அப்படியே தொடர்ந்தியங்கும். "ஆதவன் எழுகிறான்" தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் ஆதவன் செயலவை என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்படும். உயர் கல்வி மாணவரின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் கலை, இலக்கியம் என்பவற்றை வளர்ப்பதற்கும் எம்மாலியன்ற பங்களிப்பைச் செய்வோம்,

## இவ்விதழில்.........


விஜய நகர நாயக்கர் காலத்தில் அங்கத இலக்கியம் (கட்டுரை)
நா. குழந்தைவேலு B. A.

இதயக் கூட்டினுள்ளே (கவிதை)
— க. கண்ணதாசன்

குருதிப் பாய்ச்சல் (கட்டுரை)
— ம. குருபரன்

இலக்கிய வானில் (சிறுகதை)
— புதுமைப் பித்தன்

பல்லவர் காலமும் பக்தி இலக்கிய நெறியும் (கட்டுரை)
— க. நாகேஸ்வரன் M. A.

மார்க்குட்டன் செவ்வி

இங்கிலாந்தின் பொருளாதார வரலாற்றில் கைத்தொழிற் புரட்சி (கட்டுரை)
— அ. குமாரவேல் B. A.


படைப்புக்கள் யாவும் படைப்பாளர் பொறுப்பே

இளைஞர்கள் ஆக்க இலக்கியங்களை படைக்க முன்வரல் வேண்டும். இதனுல் எதிர்காலத்தில் எமது மண்ணில் சிறந்த எழுத்தாளர்கள் உருவாக முடியும். ''கட்டுரை வேண்டுமானுல் தருகிறேன், ஆனுல் கதையோ, கவிதையோ என்னுல் முடியாது. எனக்கு எழுத வராது'' இதுவே எம்மில் பலரின் கருத்து. எவருமே பிறக்கும் போது எல்லாம் தெரிந்து பிறப்பதில்லை எனவே உங்கள் திறமையில் நீங்கள் நம்பிக்கை வையுங்கள். நிச்சயம் உங்களாலும் எழுதமுடியும். வளர்ந்து விட்ட எழுத்தாளருக்கு களம் அமைத்துக் கொடுப்பதல்ல எமது நோக்கம் வளர்ந்து வருபவர்களைத் தட்டிக் கொடுப்பதே சஞ்சிகையின் பணியாகும். இன்று மாணவர்கள் மத்தியில் இலக்கியம் தேவையற்ற தொன்ருக கருதப்படுகின்றது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டியதே. இளைஞர்கள் தம் ஒய்வு நேரத்தை பயனுள்ளதாக்க தரமான இலக்கியங்களைப் படித்தல் வேண்டும். கல்லூரி மட்டத்திலே இலக்கியக் கருத்தரங்குகள் நடாத்தப்படல் வேண்டும். இவற்றின் மூலம் ஈழத்து இலக்கியங்கள் இன்னும் சிறப்பான தன்மையினை எதிர் காலத்தில் பெறமுடியும்.

நிறைய ஆக்கங்கள் வந்து சேர்ந்துள்ளன. அவற்றையெல்லாம் இவ்விதழில் பிரசுரிக்க முடியவில்லை. ஆனுலும் அவற்றில் தரமான ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து வரும் இதழ்களில் நிச்சயம் வெளியிடுவோம், தொடர்ந்து எழுதுங்கள். நாம் உறுதியுடன் செயற்பட உங்கள் பங்களிப்பு அவசியம். வாழ்வில் இடர்கள் வருவது சகஜம். ஆனுல் அவற்றை யெல்லாம் ஒரு பொருட்டாக கருதாமல் முன்நோக்கிச் செல்வோம். தடைக் கற்களையும் படிக்கற்களாக மாற்றியமைப்போம்.

ஆதவன் அந்தியில் மறைந்தாலும் விடியலுக்காய் மீண்டும் எழுகிருன்.

— ஆசிரியர்

# சிந்தனைத் துளிகள்

உள்ளத்தில் ஊக்கமும், வீறும், முயற்சியும் வேண்டும். அஃதே உண்மைப் பொருள். வேறு மண்ணினைப் பொருள்! ஒருநாள் நில்லாது நீங்கிப்போகும். உள்ளச் செல்வமே உள்ள செல்வம். வெள்ளிச் செல்வம் விரைவில் அகலும். அப்படிக் கைப்பொருளை இழந்தாலும் ஊக்க முடையவர் மனமுடையார். இது போனால் இன்னும் ஈட்டிக்கொள்வோம், வலுவிருக்கிறது என்று தைரியங் கொள்வர். அத்தகைய அசைவில்லாத ஊக்கமுடையவரிடம் ஆக்கம் (செல்வம்) வழிதேடி வந்துசேரும். நாம் பாச்சும் நீருக்குத் தக்கபடி செடிகளில் மலர் குலுங்குகின்றது. அது போலவே உள்ளத் திண்மைக்கும், உண்மைக்கும், ஊக்கத்திற்கும் தக்க படியே வாழ்வில் மாந்தருக்கு உயர்வு கிடைக்கின்றது. ஒரு எளிய இராணுவச் சேவகனுயிருந்த நெப்போலியன் எப்படிப் பிரெஞ்சு தேசத் திற்கே அரசனுனன்? அநாதியாக சோற்றிற்குக்கூடக் கூலிவேலை செய்த முசோலினி எப்படி இத்தாலிக்கே சர்வாதிகாரியானுன்? நாடோடியாகத் திரிந்த மாக்ஸிம் கோர்க்கி (MAXIM GORKY) எப்படி உலகெல்லாம் புகழும் எழுத்தாளனுகி, லெனினுக்குக் கண்போலிருந்தான்? உயிருக்கே ஆபத்துடன் நாடுதோறும் திரிந்து பலவாறு வருந்திய லெனின் எவ்வாறு சோவியத் நாட்டின் இரட்சகனுனன்? எளிய சிவாஜி எப்படிச் சத்திரபதி யானுன்? எல்லாம் உள்ளத்தால் திண்மையால், முயற்சியால், தைரியத் தால் அன்றோ. நீருக்குத்தக்க மலர் நீட்டம், வீறுக்குத் தக்க வினைநீட்டம்.

உயர்ந்த எண்ணங்களைக் கொள்ளுக, முயலுக. அவை காலவசத்தால் கைகூடாமற்போனுலும், தவறுது வெற்றிபெற்றதற்குச் சமானமேயாகும். ஏனெனில், உயர்ந்த எண்ணங்கள் தன் காலத்தில் இல்லாவிடினும் பிற்காலத்திலாவது நிறைவேறும். கால் மார்க்ஸ் (KARL MARX) கைக்கொண்ட பொதுவுடமைக் கொள்கை அவர் காலத்தில் நிறைவேற வில்லை பாவம் வறுமையில் வாடியிருந்தார். எனினும் உள்ளங் குறைய வில்லை. அவருக்குப் பின் லெனின் அவர் எண்ணத்தையே நிறைவேற்றி ஒரு பெரிய நாட்டையே காப்பாற்றினுர். உயர்ந்த எண்ணங்கள் உண்மை யின் சக்திபெறும். ஒரு காலத்தில் தீவிரமாக நிறைவேறும். உரங்கொண்ட உள்ளமுடையார், தமது காரியம் சிதைந்தாலும் தளரமாட்டரார்கள். பின்னும் வீறுகொண்டு முயல்வர். உள்ளவுரன் இல்லாதவர் உலகில் பலருக்கு உதவும் வன்மையுடையோம் என்னும் பெருமையெய்தார்.

பெரிய, உடலால் பயனில்லை. பெரிய துணிந்த உள்ளமே பெருமை யுடையது. யானை, பேருடலும் கூர்கொம்பும் உடையது எனினும் தன்னிற் சிறிய உடலுள்ள புலி எதிர்த்துத் தாக்கினுல் அஞ்சி நடுங்கும். உள்ளததின் வீறு, ஆண்மை, திண்மையே ஒருவனுக்குச் சரியரன பல மாகும், அறிவாகும். அவ்வாறு மனவுறுதியில்லாதவர் மரத்தினை ஒப்பர்.

— சுவாமி சுத்தானந்த பாரதியார்.

## கனவுகள்

—செல்வி ந. பரிமளா

தமிழ் வானம் பொழிகின்ற
மழையாகுவேன் - அந்த
அமிழ் தான கவி பாடி
அலை மோதுவேன்.

கனிவான இசை பாடும்
குயிலாகுவேன் - நல்ல
இனிதான தமிழ் பேசும்
கிளியாகுவேன்.

கலை தோறும் கமழ்கின்ற
கவிஞனுகுவேன் - உயர்ந்த
கலை ஞானம் சொரிகின்ற
கருத்தாகுவேன்.

மலர் தோறு மிருக்கின்ற
மணமாகுவேன் – மடுவில்
அலர் தோறு மின்னிக்கின்ற
[illegible]தனுகுவேன்.

இசைவாணர் இசைக்கின்ற
இசையாகுவேன் - என்றன்
தசையோடும் நரம்போடும்
தமிழ் பேசுவேன்.

## ஆதவனே எழுவாய்!

வருவாய் செந்தோழா – ஒளி
தருவாய் உயிர்த் தலைவா
திருவே! நீவரும் போதில் – புவி
துலங்கும், அழகு இலங்கும்.

வந்திட நிலமகள் நகுவாள் -
இருள்
வெந்திடும் நிலை கண்டுவப்பாள்
தந்திடும் ஒளியில் சிலிர்ப்பாள்-இன்
தமிழே போலக் குழைவாள்.

ஒளிக் கதிர்க் கூர் அம்பு – வந்து
உலகிடை மெல்ல வீழ
பலிக்கடா எனவே ஆகிப்-பொய்மை
பனி போல்ச் சிதறி மாளும்.

கனவிருள் போர்வையைக் கிழித்து -
உலக
கயமை பொருமையைக் கழித்து
தினமும் வீறுடன் எழுந்து - மானுட
துயரெலாம் போக்கியே அருள்வாய்.

—செல்வி. ஸ்ரீதேவி
கணேசசுந்தரன்

மலர் சுகந்த மணம் பரப்ப வாசகர்களாகிய தங்களிடமிருந்து தரமான ஆக்கங்களை எதிர் பார்க்கின்ருேம். விமர்சனக் கடிதங்களை வரவேற்கின்ருேம். நாம் உறுதியுடன் செயற்பட உங்கள் பங்களிப்பவசியம்.

—''ஆதவன் செயலவை''

# விஜய நகர நாயக்கர் காலத்தில் அங்கத இலக்கியம்

நா. குழந்தைவேலு B. A. (Tamil Spl) M. A. Q. (Cey) D. O. A. S.

தமிழிலக்கிய வரலாற்றிலே வசைக்கவி பெருந்தொகையாக எழுந்த காலம் விஜய நகர நாயக்கர் காலம் எனலாம். வசைக்கவி இக்காலத்தில் பெருந்தொகையாக எழுதற்கு இக் காலத்துச் சூழ்நிலை முக்கிய காரண மாய் இருந்தது என்பதிற் சந்தேகமில்லை. நாடாட்சியானது, பிற மதத் தினராகிய முஸ்லீம்கள் கையிலும், பிற மொழியினரான விஜய நகர மன்னர்கள் கையிலும் சிக்கிக் கொண்டமையினாலும், அவர்கள் ஆட்சி அடிக்கடி மாறுதலுற்றமையினாலும் நாட்டு மக்களிடையே வறுமை குடிகொண்டதோடு அவர்கள் தத்தம் ஊர்களைவிட்டு ஓடிப் பாதுகாவலுள்ள இடங்களைத் தேடி அலைய வேண்டிய நிலை ஏற்படலா யிற்று. இங்ஙனம் நிம்மதியற்ற நிலையிலிருந்த மக்களின் உள்ளத்திலே வெறுப்புணர்ச்சி தோன்றுதல் இயல்பாகும். வாழ்க்கையில் மக்களுக்கு ஒரு திருப்தி மனப்பான்மை ஏற்பட முடியாத இச் சூழ்நிலை வசைக்கவி தோன்றுவதற்கு வாய்ப்பாக இருந்தது எனலாம்.

ஒரு சமுதாயத்திலோ, தனிமனிதனிடத்திலோ காணப்படும் ஊழல்களையும், குறைபாடுகளையும் கடிந்து அவற்றை ஒழிக்கும் நோக் காகக் குத்தலான முறையில் அவற்றை எடுத்துக்கூறும் இலக்கியம் வசைக்கவி அல்லது அங்கதம் எனப்படும். அங்கதம்; செய்யுள் இலக் கியத்தில் மட்டுமின்றி, இன்பியல் நாடகத்திலும், நாவல் முதலிய உரைநடை இலக்கியத்திலும் வருதலுண்டு. மக்கள் சமுதாயத்திலே இகழ்ச்சிக்கு ஏதுவாயுள்ள ஒழுகலாற்றினை ஒழிக்கும் நோக்கமாக அது கையாளப்படுமிடத்து, அது பெரும்பாலும் நகைச்சுவையோடு கூடி வருதலைக் காணலாம். அந்த நகை, ஒரு நையாண்டிச் சிரிப்பாவ தன்றி அர்த்தமற்ற விகடச் சிரிப்பு ஆகமாட்டாது ஒரு ஆசிரியன் தன் னுடைய மாணவர்களைத் திருத்தப் புகும்பொழுது கைக்கொள்ளும் வழி வகைகளுக்கும், அங்கத ஆசிரியன் கைக்கொள்வனவற்றிற்கும் வேறு பாடு உண்டு. ஆசிரியன் அவர்களுடைய குற்றங்களை நேரிலே தர்க்க முறையாக எடுத்துக் கூறிக் கடிந்து பேசுதலை நாம் பெரும்பாலும் காண லாம். அங்கத ஆசிரியன், இகழ்ச்சிக்கு உரியனவற்றை நேரில் எடுத் துக் கூறுமல் மறைமுகமாக அல்லது குறிப்பாக எடுத்துக் காட்டியும், புகழ்ச்சிக்கு உரியவற்றோடு சார்த்தியும் ஒப்பிட்டும் மனத்தைப் புண் படுத்தாத வகையில் நகைச்சுவை தோன்றக் கூறியும் கடிதல் உண்டு. இவ்வாறு புத்தி சாதுரியங்களைக் கையாளாது நேரிலே வன்மையாக வும் குத்தலாகவும் வெகுளிச் சுவை தோன்றக் கடிந்து கூறுதலுமுண்டு.

அவன் எத்தகைய உபாயங்களைக் கையாண்டபோதும், சமூகத்தையும் தனி மனிதனையும் திருத்துதல் ஆகிய ஒன்றனை மட்டுமே நோக்கமாகக் கொள்ளுகின்றான்.

அங்கதம், இலத்தீன் முதலிய இலக்கிய வளமுள்ள தொன் மொழிகளிலும் ஆங்கிலம் முதலிய இக்கால ஐரோப்பிய மொழிகளிலும் சிறப்புற்று விளங்குதலைக் காணலாம். அங்கதம்பற்றித் தொல்காப்பியர் கூறுவதில் இருந்து அது அவர் காலத்திற்கு முன்னரே தமிழிலக்கியத்தில் இடம்பெற்றுவிட்டது என்பது புலனாகின்றது. அதுபற்றித் தொல்காப்பியர் கூறுமிடத்து,

''அங்கதந் தானே அரிறபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே''
''செம்பொருள் ஆயின வசையெனப் படுமே''
''மொழிகரந்து சொல்லினது பழிகரப் பாகும்''
வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்''

எனக் கூறியிருத்தலைக் காணலாம். வசையொடும், நசையொடும் என வரும் சூத்திரப் பகுதியிலே உள்ள 'நசை' என்னும் சொல் 'நகை' என்று இருந்திருக்குமோ என்று கணேசையர் தம் அடிக்குறிப்பிற் கூறியிருப்பது சிந்தனைக்கு உரியதொன்றாகும். அங்கதத்திற்குரிய அம்சங்களுள் நகை முக்கியமானதொன்றாகும்; என ஆங்கில இலக்கிய ஆராய்ச்சியாளர் கூறியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

அங்கதம் என்பது, வெளிப்படையாகக் கூறுதல், கரந்த மொழியால் கூறுதல் என இருவகைப்படும் என்பது மேலே உள்ள சூத்திரங்களினால் அறியக்கிடக்கின்றது. வாய்க்கரவது சொல்லும் இகழ்ச்சி, செம்பொருள் அங்கதம் ஆகும். இகழ்ச்சியை மறைத்துக் கூறுதல் பழிகரப்பு அங்கதம் ஆகும். இத்தகைய பழிகரப்பு அங்கதமே இலக்கியத்தில் பெரிதும் கையாளப்பட்டு வருகின்றது. இதற்கு உதாரணமாக,

''தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய் தொழுக லான்''

என்னும் திருக்குறள் வெண்பாவை எடுத்துக் காட்டலாம். இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றுமாறு கயவரை இழித்துக் கூறவந்த புலவன் அவர்களைத் தேவனோடு ஒப்பிட்டுக் கூறுவதிலுள்ள இலக்கிய நலன் சுவைத்து இன்புறற்பாலது: புகழ்வதுபோல பழித்தல் என்னும் அணி வகையும் அங்கதத்தின் பாற்படுவதொன்றாகும். இதற்கு புறநானூற்றில் உள்ள மேல்வரும் செய்யுட்பகுதி தக்க உதாரணமாகும். ஔவையார்,

அதியமான் நெடுமானஞ்சியால் தொண்டைமானிடம் தூதாக அனுப்பப்பட, தொண்டைமான் ஔவையாருக்குத் தனது ஆயுத சாலையைக் காட்டிய போது பாடியது -

''இவ்வே,
பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து
கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடு நுதி சிதைந்து
கொல்துறைக்கு உற்றில மாதோ''

இச் செய்யுட் பகுதிக்கண் தொண்டைமானுடைய படைக்கலங்கள் புகழப்படுவனபோலவும் அதியமானுடைய படைக்கலங்கள் இகழப்படுவன போலவும் கூறப்பட்டிருக்கின்றன. எனினும், உண்மையில் அவர் தொண்டைமானுடைய ஆயுதங்களை இகழ்ச்சிக் குறிப்புத் தோன்றப் பழித்துக் கூறியிருப்பதுகண்டு இன்புறற்பாலது.

தமிழிலக்கிய வரலாற்றிலே அங்கதம் மூவேந்தர் காலத்திலும், அதற்குப் பின்னரும் ஆங்காங்கு காணப்படினும் அங்கதப் பாட்டுக்கள் விஜய நகர நாயக்கர் காலத்திலே பெருந்தொகையாக எழுந்ததுபோல அதற்குமுன் எழவில்லை என்றே கூறலாம். அவ்வாறு எழுதுவதற்கு இக் காலச் சூழ்நிலை முக்கிய காரணமாய் இருந்தது. செல்வம் சிலரிடத்தில் மட்டுமே தங்கியிருக்க பலர் பசிப்பிணியால் வாடும்நிலை ஏற்படும் காலத்தில் அவர்கள் மனத்திலே திருப்திக்குறைவும், கொந்தளிப்பும் ஏற்படுதல் இயல்பாகும். அது புலவர்கள் மனதிலும் உண்டாக அவர்கள் வாயிலிருந்து வசைக்கவி வெளிவருகின்றது. இக்காலத்திலே தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பார் யாருமில்லை. மூவேந்தர் அற்று முடியுமற்று, சங்கமும் போய், பாவேந்தர் காற்றில் இலவம் பஞ்சாகப் பறந்தனர். குன்றும் குழியும் குறுகி வழிநடந்து அங்காடி வீதிகளிலே அலைந்து திரிந்தனர். விண்ணீரும் வற்றிப், புவி நீரும் வற்றி வெதும்பி அழக் கண்ணீரும் புலவோர் தவித்த காலம் இது. இக்காலப்பிரிவில் இவ்வசைக்கவி மாபினை இரட்டைப் புலவர் தொடக்கிவைத்தபோதும் அது வளர்ச்சி பெறுவதை காளமேகப் புலவரின் பாடல்களில் காணலாம். இரட்டையர் பாடிய வசைக்கவிக்கு மேல்வரும் செய்யுள் ஓர் உதாரணம் ஆகும். அவர்கள் பாண்டியன் சமூகத்தில் சென்று பாடிப் பரிசுபெறும் சமயத்தில் அவனுடைய மந்திரி ஒருவன் அதை விலக்க, அவன்மீது கோபங்கொண்டு பாடியது -

''புராதனமான தமிழ்ப் புலவீரிந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்த தென்னேவகை கேட்டிலேயோ
தராதலம் வென்ற தமிழ் மாறனையுந்தன் தம்பியையும்
இராகவ னென்றுமி லக்குவ னென்று மிருந்ததுவே''

காளமேகப் புலவர் இடைச்சியர் மிகுதியாய்த் தண்ணீர் கலந்து மோர் விற்பதைக்கண்டு, இகழ்ச்சிக் குறிப்பும் நகைச்சுவையும் ஒருங்கு தோன்ற மேல்வரும் செய்யுளிற் கூறியிருப்பது படித்து இன்புறற் பாலது.

''காரென்று பேர் படைத்தாய் ககனத் துறும்போது
நீரென்று பேர் படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
வாரொன்று மென்முலைய ராச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே''

நீ வானத்தில் இருக்கும்போது 'மேகம்' என்று பேர் பெறுகிறாய். நிலத்திற்கு வந்த பிறகு 'நீர்' என்று பேர் பெறுகிறாய். இந்த மங்கை யின் கையை அடையும்போது 'மோர்' என்று பேர் பெறுகிறாய் என்பது பாடலின் பொருள்.

காளமேகப் புலவர் ஒருமுறை ஓர் ஊருக்குச் சென்றபொழுது அங்குள்ள சத்திரத்தில் அவருக்கு உணவு ஏற்பாடு செய்யப்பட்டது. அவருக்கு அப்போது கடும்பசி. உணவுக்கு நேரமாயிற்று. சமையல் ஆகிக் கொண்டிருப்பதாகத் திரும்ப திரும்ப அறிவிக்கப்பட்டதேயன்றி, உணவு வந்து சேரவில்லை. இறுதியாக ஆட்கள் வந்து, இலையிட்டு உணவு பரிமாறிய போது, காலம் தாழ்ந்து அவர்கள் உணவு பரிமாறியதைப்பற்றி நகைச் சுவையாகப் பாடிய பாடல் வருமாறு–

''கத்துகடல் சூழ் நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் – குத்தி
உலையில்இட ஊர் அடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையில் இட வெள்ளி எழும்''

இந்தச் சத்திரத்தில் உணவு சமைப்பவர்களுக்கு பொழுது அஸ்தமிக்கும்போது அரிசி வந்து சேரும். அதைக்குத்தி உலையில் இடும்போது ஊர் அமைதியாய் உறங்கிவிடும். சமைத்த சோற்றை அகப்பையால் எடுத்து இலையில் பரிமாறும்போது, பொழுது விடியத் தொடங்குவதற்கு அறிகுறியாய் கிழக்கே வெள்ளி முளைக்கும் என்பது இச் செய்யுளின் பொருள். இத்தகைய சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய வசைக்கவிகள் இக்காலப் பிரிவில் எழுந்த தனிப்பாடல்களில் காணலாம். இத்தகைய அங்கதத்தின் பாற்படும் பாடல்கள் பல காணப்பட்டபோதும் தமிழிலக் கியத்தில் அங்கதம் ஓர் இலக்கியத் துறையாகக் குறிப்பிடத்தக்களவுக்கு வளர்ச்சியடைந்து இருந்ததென்று கூறுதல் கடினமாகும். வீரமாமுனிவரின் 'பரமார்த்த குரு கதை' அங்கத இலக்கியத் துறையில் குறிப் பிடத்தக்க முயற்சியாகக் கருதப்படுகின்றது. ஆயினும் பிரமஞர் வில்லி யப்பிள்ளையின் பஞ்சலட்சண திருமுக வுலாசமும், கவிமணி தேசிகவிநா

யகம்பிள்ளையின் நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் தமிழிலக்கியத்தின் அங்கத இலக்கியத் துறையில் ஈடிணையற்றனவாகக் கருதத் தக்கன. இவற்றிற்குக் காலத்தால் முந்திய, ஈழத்து வண்ணார்பண்ணை நட்டுவச் சுப்பையர் இயற்றிய கனகி புராணம் அங்கத இலக்கிய வரிசையில் வைத்து எண்ணத்தக்க வெற்றி வாய்ந்ததாகும். அப் புராணத்திலுள்ள செய்யுட்களுக்கு ஓர் உதாரணம் வருமாறு.

''நடந்தாளொரு கன்னி மாராச கேசரி நாட்டிற் கொங்கைக்
குடந்தானசைய வொயிலா யதுகண்டு கொற்றவரும்
தொடர்ந்தார்சந் நியாசிகள் யோகம்விட் டார் சுத்த
சைவ ரெல்லாம்
மடந்தானடைதுச் சிவபூசையுங் கட்டி வைத்தனரே''

தமிழில் அங்கதம் நூல் வடிவில் வருதலை ஐரோப்பியர் காலப்பகுதி இலக்கியத்திலும், இருபதாம் நூற்றுண்டு இலக்கியத்திலும் காணலாம்.

# சீர்காழியின் பண்பு

தொகுப்பு:- க. சர்வலோகராஜா

அமைதியும், அன்பும் கனிந்த வதனமும், தமது வித்வத் தன்மையை எண்ணிக் கிஞ்சித்தும் அலட்டிக்கொள்ளாத பண்பும் கொண்டவர் மறைந்த இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள். அவர் தமது குருவின்மீதும், தான் சார்ந்த துறையான சங்கீதத்தின்மீதும் கொண்ட பக்தி வார்த்தையால் அளவிடமுடியாதது.

அண்ணுமலை பல்கலைக் கழகத்தின் இசைத்துறைக்குத் தலைவராய் இருந்த அவர் வாரமிருமுறை அங்கு வந்து வகுப்பெடுத்துவிட்டுப் போவார். இசைக் கல்லூரியின் உள்ளே செல்லும் எவரும் தமது செருப்புகளை வெளியே களற்றிவைத்துவிட்டு, உள்ளே செல்வது வழக்கம். ஒரு முறை, சீர்காழி அவர்கள் இசைக்கல்லூரிக்கு வரும்பொழுது பேராசிரியர் S. V. பார்த்தசாரதியுடன் பேசிக்கொண்டு வந்த 'பிராக்கில்' செருப்புகளைக் கழற்றுமல் படிகளைக் கடந்து காலை உள்ளேவைத்துவிட்டார். மறுகணம் தமது தவறை உணர்ந்து துடிதுடித்தவராய், 'முருகா முருகா' என்று வாய் முணுமுணுக்க வெளியே விரைந்து சென்றுர். வெளியே தன் செருப்புகளைக் கழற்றிவைத்து தமது தவறுக்குப் பரிகாரமாய் இசைக்கல்லூரியின் வாசல் படிகளை மூன்று முறை வணங்கிய பின்பே உள்ளே சென்றுர்.

இது இசையின்மீது அவர்கொண்ட பக்தியைக் காட்டுவதோடல்லாமல் அங்கு நின்ற மாணவர்களுக்கு ஓர் அரிய படிப்பினையாயும் அமைந்தது.

# இதயக் கூட்டினுள்ளே ...... — க. கண்ணதாசன்

அம்மா.!
கனவு சுமந்த விழிகளுடன்
என் – எதிர்காலம் நோக்கி
காத்துக் கிடக்கும்
என்னினிய அம்மா!

தாங்க முடியாத இம்சைப்பட்டு
என்னை – நீ
ஈன்றெடுத்த கணத்தில்
என்ன எண்ணிக் கொண்டாய்?

இதோ – இந்த நாட்டின்
மன்னன் –
உதித்திருக்கிறுன் என்று தானே?

இல்லைத் தாயே
உந்தன் –
எண்ணத்தை மாற்றிக் கொள்...

இங்கு மன்னர்கள்
சித்திரவதைப் படுவதற்கும்
ஓர் பொழுதில் – அற்ப ஆயுளில்
இறந்து பட்டுப் போகவுமே
உள்ளனர் ...

நீ – எனக்கு
முலைப்பாலூட்டும் போதெல்லாம்
வீரம் ஊட்டுவதாய் அல்லவோ
எண்ணியிருப்பாய் ...?

இப்போதெல்லாம் – என்னுல்
நிமிர்ந்து நடக்கக் கூட
முடிவதில்லை ...

இதயக் கூட்டினுள்ளே -
எப்போதுமே
ஏதோ - ஒரு
'பய'முள்ளு
கொடூரமாய் துருத்திக்
கொண்டிருக்கும்.

உயிர் வாழ்வது மட்டுமே
இப்போது
இலட்சியமாய் உள்ளது
எனக்கு ...

வேலிகள் தோறும் கண்களாய்
காது வரை -
கிழிந்த வாய்களாய்
நான் -
விமர்சிக்கப் படினும் -

ஆடை இன்றி
அம்மணமாக வேனும்,
உயிர் வாழ்வது மட்டுமே
இப்போது
இலட்சியமாய் உள்ளது
எனக்கு ...

என் அருமை அம்மாவே
எனது தேசம் - இன்று
அவ்வாறுதானே உள்ளது?.

---

சஞ்சிகை தொடர்ந்து வெளிவர உற்சாகமூட்டிய அறிஞர்களும், இதழை அழகாக்க ஆக்கங்களை தந்துதவிய கலைஞர்களும், நிதிப்பழுவை நீக்க விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரர்களும், எமது நன்றிக்குரியவர்கள்.

— "ஆதவன் செயலவை.

# குருதிப்பாய்ச்சல்

ம. குருபரன்

அண்மைக்காலங்களில் குருதிஇழப்பு சர்வசாதாரணவிடயமாகி விட்டது. குத்து, வெட்டுக்காயங்கள், பொதுவாக குருதி இழப்பிற்கு காரணமாக அமைகின்றன. ஒரு லீற்றர் வரையான குருதி இழப்பு உடலைப் பெருமளவில் பாதிப்பதில்லை. இதன்போது இழக்கப்பட்ட குருதியானது குருதியிழப்பைத் தொடர்ந்துவரும் ஓரிரு மாதங்களில் புதிதாக உருவாக்கப்படும் குருதியினால் நிவர்த்திசெய்யப்படுகின்றது. இதற்குத் தேவையானது இரும்புச்சத்தைப் போதியளவில்கொண்ட உணவேயாகும். ஆனால் குருதியானது பெருமளவில் இழக்கப்படின் குறிப்பாக குருதியின் அளவானது சாதாரணமாக உடலில் உள்ள குருதியின் அளவின் 40% குறையுமாயின் குருதிப்பாய்ச்சல் அத்தியாவசியமானதொன்றாகிறது.

குருதிப்பாய்ச்சலின்போது குருதியை வாங்குபவாது உடலில் உள்ள குருதிக்கு பொருத்தமில்லாத வகையைச்சேர்ந்த குருதி செலுத்தப்படின் குருதியில் உள்ள செங்குருதிக்கலங்கள் பல ஒன்று சேர்ந்து சிறுகட்டிகளை உருவாக்கும். இச் சிறுகட்டிகள் மயிர்த்துளைக்குழாய்கள் எனும் நுண்ணிய குருதிக்குழாய்களை அடைத்துப் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். சிறுநீரகம் பாதிக்கப்படுவதால் சிறுநீர் உற்பத்தியாக்கம் தடைப்படும். சில சமயங்களில் இறப்பும் ஏற்படலாம். 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலம்வரை அநேகமாக குருதிப்பாய்ச்சல் தோல்வியிலே முடிவடைந்தது. பின்னர் லான்டஸ்ரெய்னர் (Landsteiner) என்பவர் குருதியைப் பல கூட்டங்களாகப் பாகுபடுத்தினார். இவரது பாகுபாட்டின் அடிப்படையிலேயே தற்போது குருதிப்பாய்ச்சல் வெற்றிகரமாக நிகழ்த்தப்படுகிறது.

குருதியில் உள்ள செங்குழியங்கள் எனப்படும் கலங்களில் உள்ள Agglutinogen எனப்படும் உடல் எதிரியை அடிப்படையாகக் கொண்டு குருதி 4 கூட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. மனித செங்குழியத்தில் 2 வகையான Agglutinogen கள் காணப்படுகின்றன.

அவையாவன:- Agglutinogen A
Agglutinogen B

இவ்விரு Agglutinogen கள் குருதியில் இருப்பதை அல்லது இல்லாதிருப்பதை அடிப்படையாகக் கொண்டு குருதியானது A, B, AB, O எனும் 4 கூட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

Agglutinogen A எனும் வகை உடல் எதிரியைச் செங்குருதிக் கலங்களில் கொண்ட குருதியானது குருதிக்கூட்டம் A யைச் சேர்ந்ததாகும்.

Agglutinogen B ஐக் கொண்ட குருதியானது குருதிக்கூட்டம் B ஐச் சேர்ந்ததாகும். Agglutinogen A, Agglutinogen B எனும் 2 வகையையும் கொண்ட குருதிக்கூட்டம் AB ஐச் சேர்ந்ததாகும். Agglutinogen A யையோ Agglutinogen B யையோ கொண்டிராத குருதிக்கூட்டம் O ஐச் சேர்ந்ததாகும்.

குருதியின் குருதிப்பாய்பொருளில் Agglutinin எனப்படும் பதார்த்தம் காணப்படுகிறது. குருதிக்கூட்டம் A வகையைச் சேர்ந்த குருதியின் குருதிப்பாயத்தில் Agglutinin Anti B எனும் பதார்த்தம் காணப்படும். இதைப்போல குருதிக்கூட்டம் B யில் Agglutinin Anti A யும் குருதிக்கூட்டம் AB யில் Agglutinin Anti A, Agglutinin Anti B ஆகிய இரண்டும் காணப்படும். குருதிக்கூட்டம் O வில் Agglutinin A யோ Agglutinin B யோ காணப்படமாட்டாது.

Agglutinogen A ஐக் கொண்ட குருதிக்கூட்டம் A ஐச் சேர்ந்த குருதியானது Agglutinin Anti A ஐக் கொண்ட குருதிக்கூட்டம் B ஐச் சேர்ந்த குருதியுடன் கலக்கப்படின் செங்குருதிக்கலங்கள் பல ஒன்று சேர்ந்து சிறுகட்டிகளை உருவாக்கும். இந் நிகழ்ச்சி ஒருங்கொட்டல் என அழைக்கப்படுகிறது. இதேபோல் Agglutinogen B ஐக் கொண்ட குருதியுடன் Agglutinin Anti B ஐக் கொண்ட குருதியைக் கலக்கும்போதும் ஒருங்கொட்டல் நிகழ்கின்றது. அதாவது Agglutinogen A Agglutinin Anti A யுடனும் Agglutinogen B Agglutinin Anti B யுடனும் சேரும்போது ஒருங்கொட்டல் நிகழ்கின்றது.

இதன்படி A வகைக் குருதியுடையவர்க்கு

A வகைக்குருதியும் O வகைக்குருதியும் வழங்கலாம்.

B வகைக் குருதியுடைய்வருக்கு B வகைக்குருதியும் O வகைக்குருதியும் வழங்கலாம்.

AB வகைக் குருதியுடையவருக்கு எவ்வகைக்குருதியும் வழங்கலாம்.

O வகைக் குருதியுடையவருக்கு O வகைக்குருதி மட்டுமே வழங்கலாம்.

ஒருங்கொட்டலைத் தவிர்த்துக்கொள்வதற்கு நோயாளியின் குருதியின் கூட்டத்தைச் சேர்ந்த குருதியைச் செலுத்துவதே சிறந்ததாகும். அதே கூட்டத்தைச் சேர்ந்த குருதி கிடைக்காதவிடத்து O வகைக்குருதியைச் செலுத்தலாம். O வகைக் குருதியின் செங்குழியங்களில் எவ்வகையான Agglutinogen களும் காணப்படாததால் எவ்வகையான குருதியுடைய நோயாளிக்கும் இக்கூட்டத்தைச் சேர்ந்த குருதியைச் சேர்க்கலாம். இதனால் இது ''பொதுவழங்கி'' எனக் கூறப்படும்.

குருதிக்கூட்டம் AB ஐச் சேர்ந்த குருதியின் குருதிப்பாயத்தில் எவ் வகையான Agglutinin களும் காணப்படாததால் இக் கூட்டத்தைச் சேர்ந்த குருதியையுடைய நோயாளிக்கு எக்கூட்டத்தைச் சேர்ந்த குருதி யையும் வழங்கலாம். இதனுல் இது "பொதுவாங்கி" எனக் கூறப்படும்.

1940ம் ஆண்டு மேலுமொரு முக்கியமான குருதிக்கூட்டம் கண்டு பிடிக்கப்பட்டது. இது றீசஸ் காரணி (Rhesus factor) எனப்பெயரிடப் பட்டது.

இது செங்குருதிக்கலங்களில் உள்ள Agglutinogen D எனப்படும் பதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தப்பட்டுள்ளது. அதாவது Agglutinogen Dஐ செங்குருதிக்கலங்களில் கொண்ட குருதி யுடையவர்கள் RH+ (RH நேர்) எனப்படுவர். உலக சனத்தொகையில் 85% இவ்வாறுனவர்கள். மிகுதி 15% மக்கள் தமது செங்குருதிக்கலங் களில் Agglutinogen D அற்றவர்கள். இவர்கள் RH– (RH மறை) எனப் படுவர். ஆகவே RH காரணியையும் கருத்தில் எடுத்து குருதியை பின் வருமாறு பாகுபடுத்தலாம்.

| | |
|---|---|
| A+ | A– |
| B+ | B– |
| AB+ | AB– |
| O+ | O– |

குருதியில் இயற்கையாக Agglutinin Anti D காணப்படுவதில்லை. RH– குருதியுடையவருக்கு RH+ குருதி செலுத்தப்படின் எவ்வித வேறுபாடும் காணப்படமாட்டாது. ஆயினும் Agglutinogen Anti D குருதியில் மெதுவான வேகத்தில் உருவாக்கப்படும். இதனுல் 2ம் முறை யாக RH+ குருதி செலுத்தப்படின் ஒருங்கொட்டல் நிகழும். RH+ குருதியுடையவருக்கு RH+ குருதியையோ RH– குருதியையோ செலுத் தலாம். RH– குருதியிடைய ஆண்களைப் பொறுத்தவரையில் ஒருமுறை RH+ குருதியைச் செலுத்தலாம். எனினும் 2ம் முறை குருதிப்பாய்ச்ச லின்போது பொருத்தமான குகுதிக்கூட்டம் பாவிக்க வேண்டும்.

RH– குருதியையுடைய இளம்பெண்களுக்கு RH– குருதியே வழங் க்ப்பட வேண்டும். ஏனெனில் RH+ குருதி வழங்கப்பட்டால் குருதியில் Agglutinin Anti D உருவாக்கப்படும். இது அப் பெண்ணில் உருவாகும் குழந்தையின் குருதி RH+ ஆக இருப்பின் குழந்தையின் குருதியில் ஒருங்கொட்டலை ஏற்படுத்தும். சிலவேளைகளில் இறப்பு ஏற்படலாம். அல் லாலிடில் குழந்தை மஞ்சட்காமாலையினுல் பாதிக்கப்படும்.

ஆகவே குருதிப்பாய்ச்சலின்போது ABO பாகுபாட்டிற்கிணங்கவும் RH காரணிக்கிணங்கவும் குருதிப்பாய்ச்சல் நிகழ்த்தப்படுவது அவசியம்.

திணையும் வனப்பினையுமூட்டிச் சமயப் பிரச்சாரம் செய்தனர் நால்வர் பெருமக்கள். இப்போக்கின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாகவே சோழர்கால இலக்கியப்போக்கு அமைந்தது.

**சித்தாந்த மேன்மை:**

பக்தியிலக்கியத்தின் தொடக்கம் காரைக் காலம்மையாராலேயே தோற்றுவிக்கப்படுகின்றது. பின்னர் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகராலே வளர்த்தெடுக்கப்படுகிறது. வைணவ ஆழ்வார்களாலே போற்றப்படுகிறது. திருவிரட்டை மணிமாலை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்பன அம்மையாரது பனுவல்களாகும். திருமுறைகளின் சிறப்புக்களிலே தலையாயவை அவற்றில் பொதிந்துள்ள சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களாகும். வடமொழிப் புராணக் கருத்துக்களும், தத்துவங்களும் பல்லவர் காலத்திலே உருவாக்கப்பட்டுப் பின், சோழப் பெருமன்னர் காலத்திலே பேரிலக்கியங்களிலே பொதிந்தமைகின்றன. சுருங்கக் கூறின் ''பல்லவர் காலத்திலெழுந்த சித்தாந்தக் கருத்துக்களின் விரிவாக்கப் பட்ட தொடர்ச்சிப் பணி''யே சோழர் காலத் தத்துவ நூல்களாகும்,

**தமிழ் வருணனை மரபு:**

வடமொழிக் கல்விப் புலமையும் பயன்பாடும் பல்லவர் காலத்திலே பயில் நெறியாயிருந்த தெனினும் பக்தியானது தமிழ் மொழியிலேயே பெரிதும் ஜனரஞ்சகப் படுத்தப்பட்டது. இறைவனை ''வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்'' என்று அப்பர் பெருமான் பாடுகின்றார்.

தமிழைப் பண்ணாரின் தமிழாக ஆக்கியவர் தமிழ் வல்ல ஞானசம்பந்தர் ''கொ(ா)ஞ்சு தமிழ்'' பாடியவர் சம்பந்தர். கிளியைத் தூதாக அழைத்துச் சிவனது திருநாமத்தைக் கூறும்படி பாடியவர் அவர். 'தூது' இலக்கிய முன்னோடியாகவும் மிளிர்ந்தவர். சம்பந்தரது பாடல்களிலே இயற்கையைப் பாடும் தன்மையை முதலிருவரிகளிலேயுங்காணலாம். திருத்தலங்களது கலைவளம், திணைவளம், தெய்வீகப் பொலிவு என்பன குறித்த வருணனைப் பாடல்கள் சம்பந்தரது அருந்தமிழாக அமைந்து காணப்படுகின்றன. 'மாலைமாற்று' என்னுமொரு வகைப் பரிசோதனையினை நிகழ்த்திப் புதுமை புகுத்திய 'யாப்பியல் நிபுணர்' சம்பந்தர். வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவுமவதரித்தவர் சம்பந்தர். 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல, சம்பந்தர் திருவவதாரஞ் செய்தார். 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்' என்றார் சுந்தரர், சம்பந்தர் தமது பதிகத்தினைத் திட்ட மிட்டமைத்துப் பாடினார் பிறமதக் கண்டனம் உட்பட அவர் கையாண்ட நெறிகள் சைவ நெறியின் மேன்மைகளையெடுத்து விளக்குவனவாம். ஒவ்வொரு பதிகத்திலும் 8 வது பாடல் இராவணனைக் குறித்தும் 9 வது பாடல் பிரம விஷ்ணுக்கள் குறித்தும் 10 வது பாடல் பிறமதக் கண்டனமாகவும் 11 வது பாடல் முத்திரைக் கவியாகவும் அமைவது காணத்தக்கது,

தெய்வீகக் காதல் நெறியை இணைத்தமைக்கும் பாடல் மரபின் தொடக்கத்தினைச் சம்பந்தரிலே காணலாம். ஈரடி மேல் வைப்பு, சக்கரமாற்று, திருயமகம், திருமுக்கால் முதலிய பாவகைகளையும் கையாண்டவர் சம்பந்தர். ''அப்பர் சுவாமிகள் வழிபட்ட தமிழ் நாட்டுத் திருப்பதிகங்களை விட மிகுதியான தலங்களைச் சம்பந்தர் வணங்கிப் பாடினார்'' என்பர் ஆய்வாளர்கள்.

''தருந் தடக்கை முத்தழலோர்
மனைகள் தொறும்
இறைவனது தன்மை பாடிக்
கருந்தடங் கண்ணார்
கழல் பந்தம்மானைப்
பாட்டயரும் கழுமலமே''.

என்ற வரிகளிலிருந்து வீடுகள் தோறும் பெண்கள் கழங்கு, பந்து அம்மானை முதலியவற்றை ஆடும் பொழுது சிவபெருமான் சிறப்பினைப் பாடுதல் மரபு என்ற செய்திக் குறிப்புகளை அறிவிக்கிறார், சம்பந்தர் திருமுறைகள் முதல் மூன்றுமாகும்.

4, 5, 6 ஆம் திருமுறைகள் அப்பர் பாடியவை. கலையறிவும், அனுபவ அறிவும், பண்பட்ட உள்ளமும், பக்திவைராக்கியமும், அற்புதங்களியற்றியவருமாக அப்பரடிகளைச் சமயங்காட்டி நிற்கிறது. இயற்கையழகு விஞ்சி நிற்காத பாடல்கள் அப்பருடையவை. சிவபக்தியும், சிவதோத்திரமும் புராண இதிகாசச் செய்திக் குறிப்புகளும் மிகுதியாக இவரது திருமுறைகளிலே யிடம் பெறுகின்றன. திருத்தாண்டகம், திருவிருத்தம், திருநேரிசை' திருவங்கமாலை என்பன இவரது புதிய செய்யுள் வகைகளாகும்.

தமது வரலாற்றைத் திருப்பதிகங்களிற் பாடி வைத்து மனமுருகிப் படிப்பவரை நெக்குருகும்படி செய்த அப்பரடிகளது பக்தி அனுபவ முதிர்ச்சியை அவரது திருமுறைகளிலே தரிசிக்கலாம்

சுந்தரர் காலத்திலே சமயப் போராட்டம் பெரிதுங் குறைந்துவிட்டதாதலால் இவரது பாடல்களில் புறசமய கண்டனம் இல்லை. செந்தமிழ் நடையும் சுவை மிகுதியுமுடைய பாடல்கள் சுந்தரருடையவை. தலவருணனைகள் – இயற்கையழகு வருணனைகள் என்பவை மிகவும் சிறப்பாயமைவன.

''அரும்பருகே சுரும்பருவ
அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும்
அணிபொழில் சூழயலின்

''பொதுவாக என்னுடைய கதைகள் உலகத்துக்கு உபதேசம் பண்ணி உய்விக்க ஏற்பாடு செய்யும் ஸ்தாபனம் அல்ல; பிற்கால நல்வாழ்வுக்காக சௌகரிகம் பண்ணி வைக்கும் இன்சூரன்ஸ் ஏற்பாடும் அல்ல. எனக்குப் பிடிக்கிறவர்களையும் பிடிக்காதவனையும் கிண்டல் செய்து கொண்டிருக்கிறேன்''.

— புதுமைப்பித்தன்

வந்து வழிபடுவதற்கு ஏற்ற வகையில் இசைப் பாடல்களாக அமைந்தன. இவ்வாறு நடை எளிமையும் இசையினிமையும் கூடினமையால், தமிழ் இலக்கியத்தில் 'ஒரு மாறுதல்' ஏற்பட முடிந்தது.

ஆழ்வார்கள் நாயன்மார் பாடல்களில் துறவறம் பழிக்கப்படவில்லை. இல்லறம் வெறுக்கப்படவில்லை. நிலையாமை உணர்த்தப்படுகிறது. கலைகளும் போற்றப்படுகின்றன. இந்த உலக இன்பங்களை நுகர்ந்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம் என்ற தெளிவைப் பக்தி இலக்கியம் தருகிறது. உலக வாழ்வைக் கண்டு அஞ்சும் அச்சம் நீங்குகிறது.

ஆழ்வார் நாயன்மார்களின் பக்திப் பாடல்கள் விளைத்த புரட்சி ஒன்று; 'கடவுளுக்கு முன் மக்கள் எல்லோரும் சமமானவர்கள், கடவுள் ஒருவரே எல்லா மக்களுக்கும் தலைவர்' என்ற கருத்தைப் பரப்ப அந்தப் பாடல்கள் உதவின. அதனால் அரசர்களையும் செல்வர்களையும் பாடுவதற்குப் பயன்பட்ட தமிழ் 'கடவுளைப் பாடுவதற்கு மட்டுமே பயன்பட வேண்டும்' என்ற கொள்கை வளர்ந்தது. அரசர்களுடைய அரண்மனைகளையும் செல்வர்களின் மாளிகைகளையும் நாடிச் சென்று ஏங்கி நிற்கின்றவர்களைத் திருப்பிக் கோயில்களை நாடி நிற்கச் செய்தார்கள். அரண்மனை பெயராக அதுவரையில் வழங்கி வந்த 'கோயில்' என்ற சொல்லே கடவுளின் ஆலயத்துக்கு உரிய சொல்லாகுமாறு மாறுதல் ஏற்பட்டு விட்டது. நாட்டில் அதுவரையில் மிக உயர்ந்த கட்டமாக இருந்தவை அரண்மனைகளே. பக்திப் பாடல்கள் செய்த புரட்சியின் விளைவாக அரண்மனைகளுக்கு இருந்த சிறப்பெல்லாம் கோவில்களுக்கு உரியவையாகின.

பேராசிரியர், கலாநிதி, ஆ. வேலுப்பிள்ளை அவர்கள், "சைவருடைய பக்தியியக்கம் பெரிய புராணத்திற் பூரணத்துவம் பெற்றது போல வைணவருடைய பக்தியியக்கம் கம்பராமாயணத்திற் பூரணத்துவம் பெற்றது.' (தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், மூன்றும்பதிப்பு, 1985, பக் – 138) என்று 'முடிவு கட்டுவது' இவ்விடத்திலே சுட்டிக் காட்டப்பட வேண்டியதொரு முக்கியமான கருத்தாகும். இலக்கியங்கள் எல்லாவற்றுள்ளும் தனித்துவமான பேரின்பத்தினை நல்கி – இதயத்தை யுருக்குந் தன்மை வாய்க்கப் பெற்றவையாகப் பல்லவர் காலப் பக்தியிலக்கியங்களமைவதனைக் காண முடிகிறது. 'தமிழைப் பக்திக்குரிய மொழி' யெனக் கொள்வதிலே நுட்பமான உண்மைகளுள வென்பதனை ஒப்புக் கொண்டேயாக வேண்டியுள்ளது. ✲

---

சென்ற இதழில் வெளியாகியிருந்த செவ்வியில் சில கருத்துப் பிழைகள் இருப்பதாகச் சம்பந்தப்பட்டவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர், தவறுக்கு வருந்துகின்றோம். தொடர்ந்து இடம் பெறாமல் பார்த்துக் கொள்வோம்.

— "ஆசிரியர்"

# இலக்கிய வானில்

இலக்கியத் துறை வளர்ச்சிக்கு காத்திரமான பங்காற்றிய எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரது ஆக்கங்களை இலக்கிய வானில் என்ற இப்பகுதியில் தொடர்ந்து பிரசுரிக்கவுள்ளோம். இம்முறை இலக்கியவானில் புதுமைப்பித்தன் இடம் பெறுகின்றார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியினைப் போல் சிறுகதை என்றதும் நினைவிற்கு வருவது புதுமைப்பித்தன் பெயரே. தனது ஆணித்தரமான கருத்துக்களால் எழுத்துலகில் புதுமை படைத்தவர். 1906 . ம் ஆண்டு இவ்வுலகில் பிறந்த புதுமைப் பித்தன் அவர்களது இயற்பெயர் சோ. விருத்தாசலம் என்பதாகும். தமிழ் நாட்டிலுள்ள திருநெல்வேலியில் பி. ஏ. வரை படித்துப் பட்டம் பெற்ற இவர் தினமணிப் பத்திரிகையிலும், பின்னர் தினசரிப் பத்திரிகையிலும் பல ஆண்டுகள் துணை ஆசிரியராக பணி புரிந்தவர். திரைப்படத் துறையிலும் தன் வாழ்வின் கடைசிக் காலத்தில் எழுத்துப் பணி செய்தார். மணிக்கொடியிலும் வேறு சில பத்திரிகைகளிலும் எழுதிய கதைகள் வாயிலாக, இவர் மறைந்து நாற்பதாண்டுகள் சென்றுவிட்ட போதும் தமிழ்ச் சிறுகதை உலகிலே நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றார். இவரது சிறுகதைகளில், சர்ச்சையை ஏற்படுத்திய கதை ''பொன்னகரம்''. எமது வாசகர்களுக்காக இச்சிறுகதையினை இங்கே தருகின்றோம்.

— *ஆசிரியர்*

பொன்னகரத்தைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்கிறார்களே, அந்தத் தத்துவத்தைக் கொண்டு நியாயம் என்று சமாதானப்பட வேண்டிய விதிதான். ஒரு சில 'மகாராஜர்' களுக்காக, இம்மையில் பயனைத் தேடிக் கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு, உண்மையில் ஒரு பொன்னகரந்தான் அது.

ரயில்வேத் தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து. அது தான் அங்கு 'மெயின்' ரஸ்தா. கை கோத்த நான்கு பேர் வரிசை

தாராளமாகப் போகலாம். எதிரே வண்டிகள் வராவிட்டால். அதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு. முயல் வளைவுகள் போல.

இந்தத் திவ்வியப் பிரதேசத் தகசிக்க வேண்டுமானுல், சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்ருல்தான் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குளம்புகள், சாலையோரமாக முனிசிபல் கங்கை – அல்ல; யமுனைதானே கறுப்பாக இருக்கும்? அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி; அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வேத் தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக் கூடுகள் ஆமாம், வசிப்பதற்குத் தான்.

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை – சாரண எண்ணெய் விளக்கு. அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றி வைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு 'மீன் பிடித்து' விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில் மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம்; ஊகிய வடை, இத்தியாதி உருண்டு வரும். அது அந்தஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வேத் தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? 'போனுல் பெற்ருேருக்குத்தான் கொஞ்சம் பாரம் ஒழிந்ததே! குழந்தைகள்தான் என்ன 'கிளாஸ்கோ' 'மெல்லின் ஸ்பூட்' குழந்தைகளா, கம்பி இடையில் போகாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்துக்கு, வரிசையாக நின்று, 'குட்மார்னிங் சார்!' என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அது தான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறந்தான் ஊர் கல கல வென்று உயிர் பெற்று இருக்கும். அப்பொழுதிலிருந்து அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்க வரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பது என்ருல் ஒரு பாரதப் போர்.

இளவயதில் நரைத்தது போல் பஞ்சு படிந்த தலை. மாசடைந்த கண்கள் – விடிய விடிய மின்சார 'ஸ்பின்டிலே'ப் (கதிர்) பார்த்துக் கொண்டு இருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள் தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு, ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது? பாக்டீரியா, விஷக் கிருமிகள். காலரா, இத்தியாதி அங்கிருந்து தானே உற்பத்தி செய்யப்படுகின்,

றன! எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும். பழைய காலத்து மனிதன், புலி, சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான். அவைகளும் அவனைக் கொன்றன; அவனும் அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமை அற்று, வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒரு பெரிய வேட்டை. அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு—வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி. அதைப் பற்றி அங்கு அதிகக்கவலை இல்லை. அது வேறு உலகம் – ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது இருபது. அல்லது இருபத்திரண்டுக்கு மேல் போகாது. புருஷன் 'ஜட்கா' வைத்திருக்கிறான். சொந்த வண்டிதான். அம்மாளும் முருகேசன் (அவள்புருஷன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை – ஆக நபர் ஐந்து சேர்ந்து அவர்கள் குடும்பம் இருவருடைய வரும்படியில் தான் இவர்கள் சாப்பாடு – (குதிரை உட்பட), வீட்டு வாடகை, போலீஸ்; மாமூல் முருகேசன் தம்பி, திருட்டுத் தனமாகக் கஞ்சா அடிக்கக் காசு – எல்லாம் இதற்குள் தான். எல்லோரும் ஏக தேசக் குடியர்கள்தான். 'டல் ஸீசனில்' பசியை மறக்க வேறு வழி? பசி! ஏயா, பசி! 'பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்' என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே! அங்கு நீர் ஒரு நாள் இருந்தால், உமக்கு அடிவயிற்றில் இருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்குக் குஷி. அவனும் அவன் குதிரையும் 'தண்ணி' போட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி 'டோக்கர்' அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்குப் பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டு வந்து போடும் பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க, வீக்கத்துக்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுது தான் சற்றுப் பேசினான். அவனுக்குப் பால் – கஞ்சி வேண்டுமாம்! அம்மாளுக்குக் கூலி போட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?
அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

'கும்' இருட்டு, பஞ்சாங்கத்தின் படி இன்றைக்குச் சந்திரன் வர வேண்டும், ஆனால் அது மேகத்தில் மறைந்து கொண்டால், முனிசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும் போல இரைச்சல் தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய் விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்திரன் பக்கத்தில் ஒருவன் – அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவள். இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளும் முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள். ஆம், புருஷனுக்குப் பால் – கஞ்சி வார்க்கத்தான்! என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இது தான் ஐயா! பொன்னகரம்.

# "ஓவியன் தான் தேடுதலை மேற்கொள்ளும்போதே ரசிகனையும் தேடவைக்கிறான்"



"நான் தேடுகிறேன்... கண்டுபிடிக்கிறேன்... கிறுகிறேன்... நீங்களும் தேடுங்கள்... கண்டுபிடியுங்கள்... ரசியுங்கள்..." என்று கூறுகின்ற திரு. அ. மாற்கு அவர்கள் ஒரு ஓவியஆசிரியர். தான் கற்பிக்கும் கலையை வெறும் ஜீவனோபாயமாக மாத்திரம் கொள்ளாமல் ஆத்மார்த்தமான விருப்போடு அதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருபவர். இளைய சமுதாயத்தினரை நவீன ஓவியத்துறையில் ஈடுபடுத்தி - ஊக்குவித்து அவர்கள் அதைப் பயிலவும் மேன்மையுறவும் தன்னாலான இதயபூர்வமான ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்குபவர். கலைனுடைய மேன்மைகள் குறித்து உன்னதமான அபிப்பிராயங்களைச் சொல்பவர். பழகுவதற்கு மிகவும் இனியவர். 'ஆதவன் எழுகிறான்' சஞ்சிகைக்காக அவருடன் திரு. மு. ரவீந்திரன், திரு. க. கண்ணதாசன், திரு. ச. சண்முகலிங்கம், திரு. ந. சத்தியபாலன் ஆகியோர் மேற்கொண்ட செவ்வி இங்கே பிரசுரமாகிறது.

---

☐ **இன்று சங்கீதம், நடனம், இலக்கியம் முதலான கலைத்துறைகள் நம் மத்தியில் பரவலான இடத்தைப் பெற்றுள்ளன. பொதுவாக அவற்றை விரும்பி வரவேற்கிறவர்களின் தொகையும் அதிகமென்றே கூறவேண்டும். அதேயளவுக்கு ஓவியம் அதுவும் நவீன ஓவியம் வரவேற்புப் பெறாததற்கான காரணம் எதுவென்று நினைக்கிறீர்கள்?**

○ ஏனைய கலைத்துறைகளுக்கு பரவலான அறிமுகங்களும் மேடையேற்ற வாய்ப்புக்களும் கிடைக்கின்றன. ஆகவே அவை பொதுஜன வரவேற்புகளை எளிதில் பெற்றுவிடுகின்றன. இந்த வகையில் பார்க்கும்பொழுது, ஓவியத்திற்குச் சரியான அறிமுகம் இல்லை என்றே சொல்ல வேண்டி இருக்கிறது. ஏனைய நுண் கலைகளுக்கு அரங்கேற்ற வாய்ப்புகள்

இருப்பதுபோல் ஓவியத்திற்கும் ஓவியக் கண்காட்சிகள் போன்ற வாய்ப்புகள் இருந்தால் இதுவும் போதிய வரவேற்புப்பெறமுடியும்.

இன்று மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஓவியத்துறைபற்றிய ஒரு ஈடுபாடும், அதனைப் பயில வேண்டும் எனும் ஆர்வமும் இருப்பதைக் காணமுடிகிறது. அதனைப் பயிலும் நோக்கோடு என்னை நோக்கி வருகின்றவர்கள், எவ்வளவு விரைவாக அதனைப் பயில முடியும் என்பதுபற்றியும், மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற முடியும் என்பதுபற்றியுமே கூடிய பிரக்ஞையுடன் உரையாடுவதைக் காணமுடிகிறது. துரதிஷ்டவசமாக நமது யாழ்ப்பாண மக்கள் எதைப் பயில முன்வந்தாலும் அதனால் பெறக் கூடிய பண வருமானத்தையே முதன்மைப்படுத்தி நாடுகின்ற இயல்புடையவராக இருப்பதும் மேற் சொன்ன குறைபாட்டுக்கு ஒரு காரணம் எனக் கருதலாம்.

☐ ஓவியம் எனப் பொதுவாகக் குறிப்பிடுவதற்கும், நவீன ஓவியம் எனக் கருதுவதற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் ஏதேனும் இருப்பதாகக் கருதுகிறீர்களா?

ஓவியம் என்ற சொல் கருதி நிற்பது, குறிப்பிட்ட ஒன்றைத்தான் அதாவது மனிதன் கருத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்துகின்ற ஒரு கலைச் சாதனம் அது. ஆரம்ப காலங்களில் ஒன்றினை உள்ளபடியே வரைகின்ற முறை அனுசரிக்கப்பட்டு வந்தது. புகைப்படத்துறை தோன்றுத காலத்தில் ஓவியத்தின் அந்த இயல்பு பயன்பாடுடையதாய் இருந்தது. ஆனால், காலப்போக்கில் புகைப்படத்துறையும் தோன்றிவிட்ட பிறகு, அத்தகைய ஓவியங்களின் தேவை முக்கியத்துவம் பெறவில்லை. கால வளர்ச்சியில் ஒரு ஓவியன் தனது மனக்கருத்தை வெளிப்படுத்த உதவும் ஒரு சாதனமாக அதைக் கைக்கொண்டான். அது நவீனத்துவம் பொருந்தியதாய் இருந்தமையால் நவீன ஓவியம் என்ற பெயரோடு பிரபல்யம் பெறலாயிற்று. மேலும், எல்லோரும் காலம்காலமாய் செய்து வந்ததையே நானும் செய்துகொண்டிருக்காமல் புதிதாக ஏதாவது சாதிக்க வேண்டும் எனும் உந்துதல் புதிய அமைப்பிலான ஓவியத்துறையின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாய் அமைந்தது எனலாம்.

☐ ஓவியம் - ஏனைய நுண்கலைகளைப் போலவே பாடசாலைகளில் ஒரு பாடமாக போதிக்கப்படுகிறது. இளைய சமூகத்தினரிடம் ஓவியம் தொடர்பான ஈடுபாடு (மனமார்ந்த விருப்பு) குறைவாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்தக் குறைபாட்டை நீக்கி அவர்களிடத்தில் இக் கலையின் சிறப்பை உணர்த்தி ஈடுபடச் செய்வதற்கு என்ன வழிவகைகளைக் கையாளலாம் எனக் கருதுகிறீர்கள்?

இந்த இடத்தில்-நான் மீண்டும் வலியுறுத்தவிரும்புவது ஓவியக்கண்காட்சிகளின் இன்றியமையாத தன்மையினைத்தான் மேலும் பாடசாலைகளில் ஓவியத்தைக் கற்பிக்கின்ற

ஆசிரியர்கள் அதனை மாணவர்கள் விரும்பிக் கற்கின்ற விதமாக - அதில் ஈடுபாடு கொள்ளக்கூடிய விதத்தில் அதனைக் கற்பிக்க வேண்டும். அத்தோடு இன்றைய நிலையில் மாணவர்கள் நுண்கலைப்பாடங்களைத் தெரிவு செய்கின்றபோது பெருமளவு மாணவிகள்கூட சங்கீதம், நடனம் போன்றவற்றுடன் ஓவியத்தையும் ஈடுபாட்டோடு கற்றுக்கொள்ள முன்வருவதனை அவதானிக்க முடிகிறது. அத்தகையவர்களை நன்கு கற்பித்து அவர்களை இத்துறையில் தேர்ச்சி பெறவைத்துக் கண்காட்சிகள்மூலம் அவர்களை வெளியுலகிற்கு அறிமுகம் செய்துவைக்கும்போது பரவலான ஈடுபாடுடையவர்கள் உருவாகும் நிலையினை ஏற்படுத்தமுடியும். அதுபோல சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவையும் அவர்களது ஓவியங்களைப் பிரசுரம் செய்து அவர்களை ஊக்குவிப்பதும் ஒரு நல்ல வழியென்று கூறலாம்.

☐ **நவீன ஓவியத்தை சாதாரணமாக எவருமே வரைந்துவிடமுடியும் என்ற கருத்து நிலவுகின்றது. இதைப்பற்றி என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

❁ (சிரிப்புடன்) இது ஒரு தவறான கருத்து. பார்த்தவுடன் வரைந்துவிடலாம் போலத்தோன்றினாலும் யாராலும் அதனை அப்படிவரைந்துவிடமுடியாது. ஓவியத்தை வரைவதற்கு ஆழ்ந்த ஈடுபாடு பெருமளவு பயிற்சி இவையெல்லாம் அவசியமாகத் தேவைப்படுகின்றன. ஒருவன் ஒரு ஓவியத்தை வரையும்போது குறிப்பிட்ட ஒரு எண்ணத்தை மனதில்கொண்டுதான் வரைகிறான். எனவே அது என்ன எண்ணக் கருத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் ஒருவனுக்கு அவசியமாகிறது. உதாரணமாக ஒரு மரபுவழி ஓவியன் காந்திஜியை வரைந்து தரும்போது நாம் சுலபமாக அதனை அடையாளம் காணமுடியும். ஆனால் அதையே ஒரு நவீன ஓவியன் வரையும்போது அதன் அமைப்பினைக்கொண்டு எளிதில் அந்த ஓவியம் இன்னதுதான் என அறியமுடியாது போகலாம். காந்திஜியின் சில முக்கியமான சிறப்பம்சங்களை அந்த ஓவியம் முன்னிலைப் படுத்தி அமைக்கப்பட்டிருக்கலாம். எனவே ஒரு ரசிகன் தேடுதல் பண்பின் கூர்மையினைக்கொண்டு ஓவியத்தை அடையாளம் காணுகிறான். ஓவியன் தான் தேடுதலை மேற்கொள்ளும்போதே ரசிகனையும் தேட வைக்கிறான். இதுவே நவீன ஓவியத்தின் ஒரு பண்பு எனலாம்.

☐ **ஒருவர் கண்ணில் ஒரு ஓவியம் நிறைய அர்த்தமுடையதாகவும் இன்னொருவர்க்கு வெறும் அபத்தமாகவும் படுகிறது - உங்கள் கருத்து என்ன?**

❁ ஒரு ஓவியத்தைப் பார்த்து அதன் உட்பொருள் இன்னதுதான் என்று கண்டுகொள்ளும் ஈடுபாடோ ஆர்வமோ அவற்றைப் பார்க்கிற பலரிடம், ஏன் பல புத்தி ஜீவிகளிடம்கூட இல்லாதிருப்பதைக் காணுகிறோம். ஒரு ஓவியம் ஏன் இப்படி இருக்கிறது? அது சொல்லுகின்ற

செய்தி என்ன? என அறிகின்ற இயல்பே பலரிடமில்லை. அதேவேளை எல்லோராலும் ஒரு ஓவியத்தைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியும் என்றும் சொல்லமுடியாது.

**ஒரு நவீன ஓவியத்தில் மனித மன உணர்வுகளை மிகவும் சிறப்பாக சித்தரிக்க முடியும் எனக் கருதுகின்றீர்களா? (நடனம், இசை, இலக்கியம்போல்)**

☐ நிச்சயமாக முடியும் - ஒரு ஓவியன்கூட குறிப்பிட்ட மன உணர்வின் உந்துதலின் பேரில்தான் வரையத் தொடங்குகிறான். அவனது மன ஆழத்தில்தான் ஒரு ஓவியம் உருவாகத் தொடங்குகிறது. மேலும் ஒருவரை ஓவியமாக வரையத் தொடங்குமுன்னர் ஒரு ஓவியன் அவரோடு ஆறுதலாக உரையாடுகின்றான். அவரது உள் இயல்புகளை அடையாளம் காணுகிறான். பின்னர் அந்தக் குணம்சங்களைப் பிரதிபலிக்கும் விதமாக அவரது உருவத்தை வரைகிறான் - இதுபற்றி ஒரு சரித்திரச் செய்தியை இவ்விடத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு சமயம், வின்சன்ட் சேர்ச்சில் அவர்களை ஒரு ஓவியர் (கிரகாம் சதலாண்ட்) ஓவியமாக வரைந்து கொண்டுபோய் பாராளுமன்றத்தில் சேர்ச்சில் அமரும் நாற்காலியில் வைத்தார். ஏனைய மந்திரிகள் மற்றும் அங்கிருந்தோர் அந்த ஓவியத்தைப் பார்த்து ஒரு யுத்த மந்திரியை இப்படியா வரைவது? பார்த்தால் ஒரு நாய் அமர்ந்திருப்பதைப்போல் அல்லவா இருக்கிறது என்று சிரித்தார்கள். அந்தவேளை சேர்ச்சிலும் வந்தார், ஓவியத்தைக் கண்டார் முன்புறமாகவும் பக்கவாட்டிலும் நின்று ஓவியத்தை நன்கு அவதானித்தார். ஓவியம் வரைவதனையே தனது பொழுதுபோக்காகக்கொண்ட சேர்ச்சில் அந்த ஓவியரை அணுகி அவரை இறுகத்தழுவி ''என்னை மிகவும் சிறப்பாக - எனது குணம்சங்கள் வெளிப்படும் வகையில் வரைந்திருக்கிறீர்கள்'' என்று சொல்லிப் பாராட்டினாராம் - எனவே இதிலிருந்து மனிதனுடைய குணம்சங்கள் ஓவியத்தில் மிகச் சிறப்பாகச் சித்தரிக்க முடியுமென்று தெரிகிறதல்லவா.

☐ **சமூகப் பிரச்சனைகள் - தற்கால நடைமுறை வாழ்க்கை நிலைகள் இவற்றை நவீன ஓவியம் எந்த அளவுக்குச் சித்தரிக்கமுடியும் என நினைக்கிறீர்கள்?**

இந்த விஷயத்தில் காட்டூன்கள் பெரும்பங்கு வகிப்பதை அவதானிக்கலாம். மேலும் அண்மையில் இடம்பெற்ற ஓவியக் கண்காட்சிகளில் சமூக அரசியல் பிரச்சனைகளைச் சித்தரிக்கும் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. அவற்றுள் பல மிக ஆழமான சித்தரிப்புகளாக அமைந்திருப்பதை அவதானிக்க கூடியதாய் இருந்தது. எனவே ஓவியத்தினூடாக அவற்றைச் சிறப்பாகச் சித்தரிக்க முடியும் என்றே கூறவேண்டும்.

**ஓவியக் கலையின் வளர்ச்சிக்கும் அதன் பரவலான முன்னேற்றத்திற்குச் சஞ்சிகைகள் - பத்திரிகைகள் எந்த விதத்தில் உதவ முடியும்?**

☐ முகப்பு ஓவியங்களைப் பிரசுரித்தல், ஓவியங்களுக்காக பக்கங்களை ஒதுக்குதல், ஓவியங்கள்பற்றிய செவ்விகள், அவர்களது கருத்துக்கள் என்பவற்றைப் பத்திரிகை, சஞ்சிகைகளில் பிரசுரிக்க முன்வருதல் என்பன ஓவியத்துறையை ஊக்குவிப்பதாக இருக்கும் "அலை" போன்ற சஞ்சிகைகள் யோசப் யேம்ஸ் போன்றோரின் செவ்வியினைப் பிரசுரித்ததையும் நவீன ஓவியங்களை முகப்புப்படமாகப்பிரசுரிப்பதும் ஓர் நல்ல உதாரணமாகும்.

அத்துடன் நான் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால் அடிக்கடி ஓவியக் கண்காட்சிகளை ஆங்காங்கே நடாத்துவதினுல் மாணவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஓவியம் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

ஓவியங்களைத் தொங்கவிட்டு அழகுபடுத்தலும் வசதி படைத்தோரும் கலை ஆர்வமுள்ளோரும் தமது வீடுகளின் சுவர்களில் நல்லதோர் இடத்தினை ஒதுக்கி அதில் புடைப்புச் சிற்பங்கள் போன்றவற்றை அமைப்பதனுலும் இக் கலைக்கு ஊக்கமளிக்கலாம். அனேகமாக இப்போது தெற்கில் இவை பரவலாக வளர்ந்து வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

**❁ தொடர்ந்து இக் கலைதொடர்பாக ஈடுபாடுள்ளவர்களை வளர்க்க நீங்கள் என்ன வகையில் முயற்சி செய்கிறீர்கள்?**

☐ நவீன ஓவியத்தில் ஆர்வமுள்ளவர்களுக்காக வகுப்புக்களை நடாத்தியும் அவர்களுக்கான கண்காட்சிகளை ஒழுங்குபண்ணி அவர்களைப் புறஉலகுக்கு அறிமுகம் செய்தும் வருகிறேன். அண்மையில் செல்வி வாசுகி ஜெகந்நாதனின் ஓவியக்கண்காட்சியொன்றை நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு சாதாரணமாக ஒவ்வொருவரும் தமது வீட்டுச்சுவர்களில் நவீன ஓவியங்களைத் தொங்கவிட்டு அழகுபடுத்த முன்வரவேண்டும் என நான் விரும்புகின்றேன்.

அது பரவலாக மேற்கொள்ளப்படுவது ஓவியம்பற்றிய ஈடுபாட்டு உணர்வினைச் சகலர் மத்தியிலும் பரப்ப உதவியாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

❊

---

"ஆதவன் எழுகிறுன்" சஞ்சிகையில் நூல் நயம் எனும் பகுதி புதிதாக இடம் பெறவுள்ளது. ஈழத்து நூல், சஞ்சிகை வெளியீட்டாளர்களே உங்கள் நூல்களும் இப்பகுதியில் இடம் பெறவேண்டுமா? பிரதிகளை உடன் எமது முகவரிக்கு அனுப்புங்கள். சேர்த்துக் கொள்வோம்.

ஆதவன் செயலவை

முகப்பு ஓவியம் வரைந்தவர் : திரு. அ. மாற்கு

## ஏன் எழுதுகிறேன்

''இலக்கியப்பணி என்று எதைச் சொல்வது? என் ஆத்ம எதிரொலிப் பாக நான் வாழும் வாழ்க்கையின் ரஸனையை எனக்கு எளிதாகக் கைவரும் எழுத்தின் மூலம் வெளிக் காட்டுகிறேன். இதில் சேவை என் பதேச பணி என்பதோ இடம் பெற வில்லை. என்னுடைய இன்பங்களை, நான் துய்க்கும் சோக உணர்வுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள் ளவே நான் விரும்புகிறேன். சுற்றிலும் உலகம் சிறியதும் பெரியது மாக வியப்புகள் நிறைந்து இயங்கு கிறது. அதைப் பார்த்துக்கொண் டிருப்பதே ஆனந்தம்தான். அதைத் தான் நான் பகிர்ந்துகொள்கிறேன், எழுத்துமூலம்.''

*— தி. ஜானகிராமன்*

## இலக்கியமும் நானும்

வாழ்வின் அந்திம தசையில் இவ் வாறு கூறிக்கொள்ள முடிந்தாலே போதும். ''என்னுடைய கலைத்திறன் மிகச் சொற்பமானதுதான். எனினும் அந்தச் சொற்பமான கலைத் திறனையும் நான் பேணிச் சீராட்டி வளர்த்தேன். எனது அந்தரங்கத்துக்கு உவப்பான விஷயத்தையே நான் அளித்தேன். மூன்று வார்த்தைகளில் சொல்லக் கூடியதை நாலு வார்த்தைகளில் சொல்லலாகாது என்ற விதியைக் கடைசிவரையும் நான் காப்பாற்ற முயன்றேன், எனக்குக் கிடைத்த பாஷையை மலினப்படுத்தாமல் மறு சந்ததிக்கு அளிக்க நானும் என்னு லான முயற்சி எடுத்துக் கொண் டேன்.''

இவ்வளவு போதும் எனக்கு...

*— சுந்தரராமசாமி*

## எதிர் கொள்

இனிய சோதரி!
இன்றுடன் எத்தனை நாள்?
நீயும் மௌனமும்
உறவு கொண்டு...

எழுந்து பார் —
இதுதான் உச்சிவேளை...
இழந்தது எல்லாம் சொத்துக்கள்
தானே

எழுந்திரு என்றேன்
அவளோ—
வாழ்வின் வசந்தத்தை,
வண்ணக் கனவுகளை,
இழந்துவிட்ட இதயத்தை,
தேடுகிறேன் என்றாள்.

ஒரு கணம்—
இதய கடிகார பெண்டுலம்
அசைய மறுத்தது
ஆயினும் — இனிய சோதரியே!
ஆயிரம் பேர் உன்போல்...

இறந்த காலம் இறந்து போனது
எதிர் காலத்தை ஆயினும்
எதிர் கொள்ள வேண்டாமா?

எழுந்து பார்
இதுதான் உச்சி வேளை...!

— செல்வி. ந. கமலா

---

''ஆதவன் எழுகிறான்'' சஞ் சிகை வெளியிடப்படுவதன் நோக்கம் உயர்கல்வி மாண வர்களின் கல்வித் தேவை யைப் பூர்த்தி செய்தல்: இளை ஞர்களின் கலை, இலக்கிய முயற்சிகளுக்கு களம் அமைத் துக் கொடுத்தலே.

— ஆதவன் செயலவை

# இங்கிலாந்தின் பொருளாதார வரலாற்றில் கைத்தொழில் புரட்சி 3

அ. குமாரவேல் B. A. [Hons]

1760 — 1830 க்கும் இடையில் பிரித்தானியாவில் ஏற்பட்ட அடிப் படை மாற்றங்களைக் குறிக்கவே கைத்தொழிற் புரட்சி என்ற பதத் தை முதலில் ஆர்னேல்ட்ரொயின் பயன் படுத்தினர். ஆனல் அதனை புரட்சி என அழைக்கலாமா என்ப தில் பொருளாதார வரலாற்று ஆசிரியர்களிடையே வாதப் பிரதி வாதங்கள் உள்ளன. ஒஸ்ரின், நெவ், போன்ற அறிஞர்கள் கைத் தொழில் புரட்சி என்ற பதப் பிர யோகத்தை எதிர்க்கின்றனர். ரொயின்பீ என்பவர் கைத்தொழில் புரட்சி பற்றி நடத்திய தொடர் விரி வுரைகள் 1884 - ல் நூலுருவில் வெளி வந்தன. அதன் பின்பு இப் பதம் சர்வ சாதாரணமாக உப யோகிக்கப்பட்டது. ஆனலும் இங் கிலாந்தில் 1766 க்கும் 1830 க்கும் இடையில் ஒரு கைத்தொழில் புரட்சி நடந்தேறியது எனக் கூறுதல் ஒன்றில் கூறத்தகாத ஒரு கூற்ருக அல்லது விரும்பத்தகாத ஒரு பதப் பிரயோகமாகவே அமைகின்றது. பொருளாதார வரலாறு என்பது வரலாற்று ரீதியாக ஏற்பட்ட மாற் றங்களை ஒரு தொடர் நிகழ்ச்சியாக காரணங்களோடும் காரியங்களோ டும் தொடர்பு படுத்தி விரித் துரைக்கும் ஒன்ருக அமைகின்றது. பொருளாதார மாற்றங்கள் குறிப் பிட்ட ஒரு காலத்தில் தோன்றிய தென திட்டவட்டமாக வரையறுக்க முடியாது. அவ்வாறே எப்போது முடிவு பெற்றது எனவும் திட்ட வட்டமாக கூறமுடியாது. பொரு ளாதார மாற்றங்களுக்கு வர லாற்றில் பிரிநிலைக் கோடுகளை வரையறுக்க முடியாது. எனவே 1760 — 1830 க்கும் இடையில் தொழிற்புரட்சி ஏற்பட்டதென வரை யறை செய்தல் பொருத்தமான தல்ல. உண்மையில் இங்கிலாந் தில் 1760 க்கு முன்பும் 1830 க்குப் பின்பும் கூட பல அடிப்படை மாற் றங்கள் கைத்தொழிலில் ஏற்பட் டுள்ளன. 1733 ம் ஆண்டு எறி நாடா கண்டு பிடிக்கப்பட்டது.

1830 ன் பின்பும் நிலக்கரி உற் பத்திநுட்பங்கள் வளர்ச்சியடைந் தன. இம்மாற்றங்களுக்கான கார ணங்கள் இக்காலத்திற்கு முன்பும் பின்பும் இருந்துள்ளன. முதலாளித் துவஊற்றெடுப்பானது மத்திய காலத்திலேயே அதற்கான வித்தை இட்டுள்ளது. தொழிற்புரட்சியின் விளைவு முதலாளித்துவத்தின் தோற் றம் என்ருே அல்லது 1760 — 1830 க்கும் இடையிலே தான் அது தோன்றிய தென்ருே கூற முடி யாது. புரட்சி என்ற பதம் அடிப் படை மாற்றங்களை மிகக் குறுகிய

காலத்தில் அல்லது சடுதியாக உணரக் கூடிய அளவிற்கு மிக விரைவாக நடைபெறும் நிகழ்ச்சியொன்றைக் குறிப்பிடப் பயன்படுத்தப் படுகின்றது. அத்தகைய நிலையொன்று இங்கிலாந்தின் கைத்தொழில் வரலாற்றில் மிகச் சடுதியாக ஏற்பட்டதா எனில் அது அவ்வாறு நடைபெறவில்லை.

1760-1830 க்கும் இடையில் உள்ள காலம் 70 வருடங்களாகும். மனித வாழ்வில் இது ஓர் மிக நீண்ட காலம் ஆகும். இந் நீண்ட காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் புரட்சி என்ற பதத்தோடு தொடர்பு பட்டதல்ல. அது மெதுவாக ஏற்பட்ட ஒரு மாற்றமேயாகும். கைத்தொழில் புரட்சி என்பது கைத்தொழில் முறையில் பின்பற்றப் பட்ட முறையினை அது கைகளால் செய்யப்பட்ட வேலைகளை வினைப்பொறிகளால் செய்வதையும், வீடுகளில் செய்த வேலைக்குப் பதிலாக தொழிற்சாலை முறையின் அமைப்புத் தோன்றியமையும், கைத்தொழில் உற்பத்தி நோக்கில் ஏற்பட்ட மாற்றத்தினையும், நிலையானதும் சிறியதுமான ஒரு சந்தைக்காகவே உற்பத்தி செய்யப்பட்ட நிலை மாறி, குறைந்த செலவில் பேரளவுற்பத்தியாக செய்து நாட்டின் எல்லைக்கப்பால் உலகளாவிய சந்தைக்கு உற்பத்தி செய்யும் மாற்றத்தையும், இத்தகைய மாற்றங்கள் சமூக ரீதியில் ஏற்படுத்திய சில தாக்கங்களைக் குறிப்பிடவும் அதாவது எல்லா மாற்றங்களையும் தொகுத்துக் கூற புரட்சி என்ற பதத்தை ரொயின் பீகையாண்டார். இவ்வாறான மாற்றங்கள் நெசவுத் தொழிலில் ஏற்பட்டன என்பது உண்மையே, ஆனால் இம்மாற்றங்கள் சடுதியாக ஏற்பட்டனவா? அல்லது அவர் கூறிய காலப்பகுதிக்குள் மட்டும் தான் நிகழ்ந்தனவா? அல்லது அக்கால வரையறைகளுக்கு முன்பும் பின்பும் கூட நிகழ்ச்சிகள் தொடர்பு படுகின்றனவா? என்பவை போன்ற வினாக்கள் பொருளாதார வரலாற்று ஆசிரியர்களிடையே தோன்றுவது இயல்பானதே! புரட்சி என்ற சொல்லை வரையறுக்கும் போது அங்கு பலாத்காரம், விரைவு போன்ற அம்சங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதனையும் கருத்திற் கொண்டு ஆராய்ந்தால் கைத்தொழில் புரட்சி என்ற பதப் பிரயோகம் பொருத்தமற்றதாகவே யுள்ளது. ஏனெனில் அது திடீரென ஏற்பட்ட ஒன்று அல்ல. அது மெதுவாகவே நடைபெற்றது. பிறர் உணர முடியாத வகையில் தான் நடைபெற்றது. இதன் கருத்து அக்கால வரையறைக்குள் பல அடிப்படையான மாற்றங்கள் நிகழவில்லை என்பதல்ல. அடிப்படையான மாற்றங்கள் நிகழ்ந்ததென்பது உண்மையேயாகும். ஆனால் அது புரட்சி என்ற பதத்தினால் குறித்துரைக்கக் கூடிய மாற்றங்கள் அல்ல.

கைத்தொழிற் புரட்சி பிரித்தானியாவின் அரசியல் பொருளாதார சமூக நிலைகளில் பல விளைவுகளை உருவாக்கியது. அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன. எதிர்கால அரசியல் நிலைமைகளை மாற்றின. சமூக அடிப்படையை மாற்றி அமைத்தது.

விவசாயப் பொருளாதார நாடாக இருந்த இங்கிலாந்தை கைத்தொழில் நாடாக மாற்றி அமைத்தது. பிரித்தானியாவின் தேசிய உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பு அதிகரித்துச் சென்றது. வெளிநாட்டு வர்த்தகத்தில் பெருமளவிற்குத் தங்கி இருக்கும் நிலை தோன்றியது. கைத்தொழிலில் பெருமளவு மனித வலு ஈடுபடுத்தப் பட்டமையால் விவசாயத் துறைக்கான மனித வலு குறைவடைந்தது. கைத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளருக்கான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நிலைக்கு நாடு தள்ளப் பட்டது. வெளிநாட்டு வர்த்தகத்தில் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டமையால் பொருளாதாரத்தில் ஓர் உறுதியற்ற நிலை ஏற்பட்ட தென்பதும் உண்மையாகும். வெளிநாட்டுச் சந்தையில் கேள்வியில் பாதிப்பு ஏற்பட்டபோது பிரித்தானியாவின் உறுதி நிலை குலைந்தது. இறக்குமதிகளில் தடைகள் ஏற்பட்ட போது மூலப் பொருட்களைப் பெறுவதில் சிரமங்கள் தோன்றின. இங்கிலாந்து உலகில் முதன்மை நிலையைக் கைத்தொழிலில் அடைந்தமைக்காகப் பெற்றுக் கொண்ட பரிசு பொருளாதாரத்தின் உறுதியற்ற தன்மை என பொருளாதார வரலாற்று அறிஞர்கள் கூறக் கூடிய அளவுக்கு நிலைமை ஸ்திரமற்றதாகியது. ஆனாலும் பிற்காலத்தில் கைத்தொழில் மயமாக்கல் என்பதன் மூலம் இப் பாதிப்புக்களை ஈடு செய்யும் வாய்ப்புக்களையும் இங்கிலாந்து பெற்றது. இவை யாவற்றுக்கும் அடித் தளத்தை அமைத்துக் கொடுத்தது கைத்தொழில் புரட்சியேயாகும். 19ம் நூற்றுண்டின் இறுதியில் ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளின் பொருளாதாரப் போட்டியை எதிர்நோக்கக் கூடிய அளவிற்கு பிரித்தானியா வலிமையடைய முடிந்தது. ஆரம்ப கால ஸ்திரமற்ற நிலை பிற்காலத்தில் ஈடு செய்யக் கூடியதாக இருந்தது. 19ம் நூற்றுண்டில் இங்கிலாந்தின் குடித்தொகை மிக விரைவாக வளர்ச்சியடைந்து சென்றது. ஆயினும் மக்களின் வாழ்க்கை நியமமும் அதிகரித்தே சென்றது. இங்கிலாந்து அரசு பெருமளவு நிதியைப் பெறக் கூடிய வாய்ப்பு இருந்தமையால் பொதுச் செலவினங்களை அதிகரித்து வாழ்க்கை நலனை உயர்த்தக் கூடியதாக இருந்தது.

கைத்தொழிற் புரட்சி பொருளாதாரத் துறையில், இயந்திர உபயோகம், நவீன நுட்பம், ஒன்றுக்கொன்று ஈடான கண்டு பிடிப்புக்கள், முதலாளித்துவத்தின் உயர் நிலை, போன்ற பல வியத்தகு விளைவுகளையும் சில விரும்பத்தகாத விளைவுகளையும் பொருளாதாரத் துறையில் ஏற்படுத்திய அதே வேளையில் சமூக, அரசியல் அடிப்படைகளையும் மாற்றியமைத்தது. பிறப்பின் வழியினுல் பிரிந்த சமூகத்தை தொழிலின் வழியினுல் பிரிக்கும் புதிய நிலையை ஏற்படுத்தியது. சமூகத்தில் இரு முரண்பட்ட வர்க்கங்கள் தோன்றின. முதலாளி தொழிலாளி என்ற வேறுபாடு அதிகரித்து முரண்பாடுகள் வளர்ந்து

சென்றன. முதல் உள்ளவன் முக்கியத்துவம் பெறும் முதலாளித்துவ பொருளாதாரமாக இங்கிலாந்து மாறியமையினால், தொழிலாளர் நிரந்தரமாக தொழிலாளியாக, தனது இரு கைகளையே நம்பியிருக்கும் வர்க்கமாக மாறியது. கைத்தொழிற் புரட்சி உருவாக்கிய விளைவுகளில் தொழிற்சங்கத்தின் தோற்றம் மிக முக்கியமானது. கைத்தொழிற் புரட்சியின் ஆரம்ப காலத்தில் தொழிலாளர் வர்க்கம் பட்ட இன்னல்களும், வேதனைகளும் அவர்களுக்குப் பலசோதனைகளை ஏற்படுத்தின. தலையிடாக் கொள்கை என்ற சிந்தனையில் அரசாங்கம் அசட்டுத் தனமாக இருந்தமையால் தொழிலாளர் அதிக துன்பங்களை அனுபவித்தனர். குறைந்த கூலி மட்டம் காணப்பட்டது வழங்கப்பட்ட கூலியும் பணமும் பொருளுமாக வழங்கப்பட்டது. பொருட்களை விற்றபொழுது தரகு முதலாளித்துவத்தால் அதன் உண்மைப் பெறுமதி குறைந்தது. ஒரே கூடாரத்தின் கீழ் தொழிலாளர் இணைக்கப்பட்டமை ஆங்கில மக்களுக்கு ஒரு புது அனுபவமாகும். அவர்களுக்கு கல்வி, சுகாதார வசதிகள், விபத்துக்கான நட்டஈடு போன்றவை சமூகக் காப்புறுதி ஆகியவை அறவே இல்லாதிருந்தன. மிக நீண்ட நேரம் வேலை வாங்கப்பட்டது.

தொழிலாளர் 16 மணித்தியாலங்கள் கூட வேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டனர். எஞ்சியிருந்த 8 மணித்தியாலத்தில் தனது வழமையான கடமைகளை, நித்திரையையும் பூர்த்தி செய்ய வேண்டி இருந்தது. வேறு சொற்களில் முதல் உள்ளவனின் ஆனந்த வாழ்விற்காக தொழிலாளி தனது உறக்கத்தையே கைவிட்டான் எனின் அது மிகைக் கூற்றாகாது. பெண்கள், சிறுவர் ஆகியோர் வேலைக்கமர்த்தப் பட்டனர். அங்கு ஒழுக்கநெறி சிதைவடைந்தது. மனிதாபிமானம் என்பது அங்கு இலாபத்திற்காக விலை கூறி விற்கப்பட்டதெனலாம். தொழிலாளர் மந்தைகள் போல் நடாத்தப்பட்டனர். ஆரம்ப காலத்தில் மந்தைகளுக்கு இருந்த ஓய்வும் சுதந்திரமும் கூட இங்கிலாந்தின் தொழிலாளர் வர்க்கத்திற்கு இருக்கவில்லை. அரசோ முதலாளிகளின் எதிர்ப்பை சம்பாதிக்க விரும்பாது, கண்டும் காணாத மாதிரி அல்லது ஏனோ தானோ என்ற நிலையில் காணப்பட்டது. கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்தது என்பது உண்மையே. ஆனால் அக் காலகட்டத்தில் அதனால் ஏற்பட்ட சமூக விளைவுகள் இங்கிலாந்தின் வரலாற்றில் கறை படிந்த அத்தியாயங்களாகவே அமைகின்றன.

கைத்தொழிற் சாலைகளைச் சுற்றி மக்கள் பெருமளவிற்குக் குடியேறலாயினர். புதிய நகரங்கள் தோன்றின. நகரங்கள் திட்டமிடப்படாது ஒழுங்கற்ற முறையில் அமைந்தன. இதனால் போதிய வசதிகள் இருக்கவில்லை. ஒரு வீட்டில் அது தாங்கக் கூடிய மக்களை விட அதிக மக்கள் தங்கினர். காற்றோட்ட வசதியோ, சுகாதார வசதிகளோ இல்லாதிருந்தன. தொற்று நோய்கள் அதிகரித்

தன. இறப்பு வீதம் கூடியது ஆயுள் எதிர்வு குறைந்தது. பிற்காலத்தில் அரசு தலையிட்டுத் தீர்க்கும் வரை இந்நிலை தொடர்ந்தது. இந்நிலையிலும் சனப்பெருக்கம் காணப்பட்டது. கிராமங்களில் இருந்து மக்கள் நகருக்கு வந்து குடியேறினர். ஆண்களும் பெண்களும் தொழிற்சாலைகளில் ஒன்ருக வேலை செய்தனர். அதனுல் திருமணங்கள அதிகரித்தன. இவ்விள வயதுத் திருமணங்கள் பிறப்பு வீதத்தை உயர்த்தின. இதனுல் சமூக கட்டுக்கோப்புகள் சிதறத் தொடங்கின. தொழிற்புரட்சி தொழிற்பகுப்பு முறையைக் கொண்டு வந்தது. ஒவ்வொரு தொழிலாளியும் ஒரு குறித்த வேலையை திரும்பத் திரும்ப செய்ய வேண்டி இருந்தது. தொழிலாளி இதனுல் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டதோடு முதலாளிக்கு மேலும் மேலும் கட்டுப்பட வேண்டிய நிலையைத் தோற்றுவித்தது, சமூக ரீதியாக குறுகிய காலத்தில் ஏற்பட்ட கெடுதலில் இருந்து தன்னைத்தானே பாதுகாக்க தொழிற்சங்கத்தை அமைக்க வேண்டி இருந்தது. தொழிற்சங்கங்கள் ஆங்காங்கே சிதறலாகத் தோன்றின. ஆரம்பத்தில் அரசினதும் முதலாளிகளினதும் இறுக்கமான நடவடிக்கையால் அவை பெலவீனமாகவே இருந்தன. கைத்தொழில் புரட்சி ஆரம்பித்த குறுகிய காலத்தில் விளைவுகள் மிகப் பாரதூரமாக இருந்தன. ஆனுல் நீண்ட கால நோக்கில் சமூக பொருளாதார அடிப்படைகளில் நன்மையைக் கொண்டு வந்தது. தொழிலாளர் வர்க்கத்தின் நலன் பேணும் அமைப்பாக தொழிற்கட்சி பிற்காலத்தில் வளர்ச்சியடையவும், அதிகாரத்தைப் பெறவும் கைத்தொழிற் புரட்சி வித்திட்டது.


# KEEN CENTRE
## Thirunelvely.

கலை, வர்த்தகம் **89. 90** G. C. E, (A/L) விஞ்ஞானம்

பொருளியல் – திரு. வரதராஜன்
வர்த்தகம் – ,, ஜெயராமன்
அளவையியல் – ,, S. S. மனேகரன்
தமிழ் – ,, குழந்தை
இந்துநாகரீகம்– ,, காரை
அரசறிவியல் – ,, மனேகரன்
புவியியல் – ,, சண்

விலங்கியல் – திரு. நாகநாதன்
தாவரவியல்– ,, குகாதரன்
பௌதீகவியல் ,, சத்தியசீலன்
இரசாயனவியல் ,, மனியம்
தூய, பிரயோக கணிதம் ,, ஈசன்

கீன் சென்ரர் — திருநெல்வேலி.

# அமுத சுரபி

— ந. அமிர்தலிங்கம்

''பார்த்தேன் சிரித்தேன் பக்கம் வரத்துடித்தேன். இது மலைத்தேன் என நான் நினைத்தேன்'' இது கவியரசு கண்ணதாசனது பாடல் அடி. ஒவ்வொரு சொல்லின் விகுதியும் ''தேன்'' என தேனாக முடிந்துள்ளது. இப்பாடலுக்கு கரு அவருக்கு எங்கிருந்து கிடைத்திருக்கும். பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்துதான் கிடைத்திருக்கும் என நாம் ஊகிக்கலாம். மேல் வரும் பகுதியைக் கவனியுங்கள்.

கொல்லிமலையிலுள்ள ஓர் ஆளிடம் தேன் கொண்டு வரும்படி சொல்லியிருந்தேன். அந்த ஆள் அன்றைய தினம் வராமல் மறுதினம் வந்து வெறுங்கையோடு நின்றதால் சிறிது கோபித்தேன். அவன் பேசினான்.

''நேற்றே மலைக்கு நடந்தேன்
பல இடங்களில் அலைந்தேன்
இறுதியில் பெரும் பாறைத்தேன்
கண்டு சிறிது மலைத்தேன்
ஒரு கொடியைப் பிடித்தேன்
ஏறிச் சென்று கலைத்தேன்
சட்டியில் பிழிந்தேன்
நன்றாக வடித்தேன்,

மகிழ்ந்தேன், அதில் சிறிது குடித்தேன், களித்தேன், களைத்தேன், அயர்ந்தேன், மறந்தேன், இன்று காலை நினைத்தேன், தேனை அடைந்தேன், விரைந்தேன், வந்தேன். இப்போதுதான் உங்களிடம் கொடுத்தேன்'' என்று. இதில் உள்ள ஒவ்வொரு சொல்லும் தேனாக இனிக்கவில்லையா? இப்பழந்தமிழ்ப் பகுதியே கண்ணதாசனின் அப்பாடலுக்கு அடிப்படையாய் இருந்திருக்கலாம். தமிழ் என்பதற்கு இனிமை என்றும் பெயர் உண்டு. புதுமணத் தம்பதியரை வாழ்த்துகின்றபோது கூட ''தமிழும் சுவையும் (இனிமை) போல் வாழ்க'' என பெரியவர்கள் வாழ்த்துவார்கள். தமிழையும் இனிமையையும் பிரிக்கவே முடியாது, இலக்கிய வளமும் இலக்கண வரம்பும் அணி சேர்க்க உவமை அணிகள் சிறந்து விளங்க தொன்மை பெற்று திகழும் தமிழ் மொழியின் இனிமைக்காக, தீங்கனிச் சுவை மிக்க கவிதைகளுக்காக வரையாது வழங்குதல் மட்டுமன்றி, இன்னுயிரையே அர்ப்பணித்த தியாகிகளும் பண்டைக் காலத்திலும் இருந்திருக்கின்றனர்; என்பதை பழந் தமிழ் இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. அதில் நந்திக் கலம் பகமும் ஒன்று.

செந்தமிழின் சாற்றைப் பிழிந்து செழுஞ் சிதச்
சந்தண மென்றுரோ தடவினர் — பைந்தமிழை
ஆராய்கின்ற கோணந்தி யாகந் தழுவாமல்
வேகின்ற நெஞ்சே விரைந்து,

இது நந்திக் கலம்பகத்தில் வரும் வெண்பா ஒன்று. இப்பாடலை எதிர்பாராத விதமாகக் கேட்ட நந்தி மன்னன் கவியின் சுவை வழி சாய்ந்த மனதினனானன். சிதை அடுக்கி அதன் மேல் அமர்ந்திருந்து கேட்க முடியுமானால் மட்டுமே அந்த ''நந்திக் கலம்பகம்'' என்ற நூலை அரங்கேற்ற முடியுமென அதை இயற்றியவன் (நந்தியின் சகோதரன்) கூறிய போதும் தன்னுயிரை ஈந்தேனும் அந்நூலை அரங்கேற்ற வேண்டும் என்ற நோக்குடையவனாக அதற்கு உடன் பட்டான்.

நந்திக்கலம்பகம் என்னும் தீங்கனிச் சுவை மிக்க நூலைநிலை பெறச் செய்ய தன் உயிரை அர்ப்பணித்த நந்தி மன்னன் எல்லாப் பாடல்களையும் கேட்ட பின் இறுதியாக உள்ள பாடல் பாடி முடிய அவனது உயிரும் பிரிந்தது. அச் செய்யுள் வருமாறு.

''வானுறு மதியை அடைந்ததுன் வதனம் மறிகடல்
புகுந்தது உன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம் கற்பகம் அடைந்
ததுன் கரங்கள்
தேனுறு மலரான் அரியிடம் புகுந்தான் செந்தழ
லடைந்ததுன் தேகம்
யானும் என் கவியும் எவ்விடம் புகுவோம்
நந்தியே நந்தயாபரனே''

வரையாது வழங்கும் வள்ளலும், ஒப்பற்ற வீரமும், புகழும் கொண்ட நந்தி மன்னன் செந்தமிழுக்காக தன் உயிரை அர்ப்பணித்து ''நற்றமிழ் நந்தி'' என போற்றப்படுகின்றான்.

அவனால் நிலைபெறச் செய்த நந்திக் கலம்பகம் என்னும் நூல் தமிழுலகம் உள்ள வரை நிலைபெற்று நிற்கும். அத்தகைய கவிகளை என்றும் போற்றுவோம். இத்தகைய தியாகிகளால் தமிழ் மொழி பாது காக்கப்பட்டு வந்துள்ளது என்பதை மனதில் கொண்டு நாமும் அத் தொண்டினைச் செய்வோமாக.

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.

# சாணக்கியனின் அரசியல் சாணக்கியம்!

★ காரை. செ. சுந்தரம்பிள்ளை ★

வடமொழித் தர்ம சாஸ்திரங்களில் ஒன்றாக அர்த்த சாஸ்திரம் எனப்படும் சாணக்கியம் விளங்குகிறது. இது பொருளியலையும், அரசியலையும் கூற வந்த சிறந்தவோர் நூலாகும். இதன் ஆசிரியர் கௌடில்யர். இவரைச் சாணக்கியர் என்றும் அழைப்பர். இவருக்கு விஷ்ணு குப்தன் என்னும் பெயரும் இருந்ததாகத் தெரிகிறது. சந்திர குப்த மௌரியன் நந்தரைத் தோற்கடித்த பெருமைக்குரியவன். அவனைப் பேரரசன் ஆக்கிய பெருமை கௌடில்யர் எனப்படும் சாணக்கியருக்கே உரியதென்பர். சந்திரகுப்த மௌரியனுடைய முதன் மந்திரியாக இருந்து அவனை வழி நடத்திய காரணத்தினுற் தான் அவன் பேரரசன் ஆனுன் என்பது வரலாற்றறிஞர்தம் கருத்தாகும்.

### தர்ம சாஸ்திரம்

அர்த்த சாஸ்திரத்துக்கு வேறும் பல பெயர்கள் உண்டு. அவற்றுள் இராச சாத்திரம், நீதி சாத்திரம், இராச நீதி, தண்டநீதி என்பன முக்கியமான பெயர்களாகும். இந்நூல் மன்னர்களின் நன்மை கருதி ஆக்கப்பட்டது எனத் தெரிகிறது. ஏனைய அறநூல்கள் ஸ்மிருதிகள் என்றும் தர்ம சாத்திரங்கள் என்றும் அழைக்கப் படுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு ஆதிய புருஷார்த்தங்கள் பற்றி ஸ்மிருதி நூல்கள் எடுத்துக் கூறுகின்றன, மக்களின் நன்மை கருதி ஆக்கப் பட்ட இந் நூல்கள் அரசர்களால் பின்பற்றப்பட்டன. அரசர்களால் பேணப்பட்ட சட்டப் புத்தகங்களாகவும் தர்ம சாஸ்திரங்கள் விளங்கின.

ஆனுல் ஓர் அரசன் தர்ம சாஸ்திரத்தை கடைப் பிடிக்கும் போது அவனுக்கு அதனுல் நன்மை ஏற்டாதெனில் தர்ம சாஸ்திரத்தை அவன் கை விடலாம் என அர்த்த சாஸ்திரம் கூறுகின்றது. இக் கருத்து பௌத்தர்களால் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

### மகாபாரதம்

இதிகாசங்களுள் மகாபாரதமும் ஒன்று. இது தர்மத்தையே வலியுறுத்துகின்றது. இந்நூல் அர்த்த சாஸ்திரக் கருத்துக்கள் பலவற்றைக் கொண்டு விளங்குகின்றது. யுத்த தர்மம், ராஜதர்மம் என்பன குருசேத்திரப் போரிலே சில இடங்கவில் மீறப்பட்டமை இதற்குச் சான்று பகரும். பிற்காலத்தில் வாழ்ந்த காளிதாச மகாகவி, பாரவி, மாகர் போன்ற பெரும்

புலவர்களுள் வராஹமிகிரர், சனகர் போன்றவர்களும் தமது நூல்களில் அர்த்த சாஸ்திரக் கருத்துக்களை அடிக்கடி கையாண்டுள்ளமை நோக்குதற்குரியது.

### பிரிவுகள்

அர்த்த சாஸ்திரம் பதினைந்து பெரும் பிரிவுகளையும், நூற்று எண்பது சிறு பிரிவுகளையும் கொண்டுள்ளது. பெரும் பிரிவுகள் அதிகரணம் என்றும் சிறு பிரிவுகள் பிரகரணம் என்றும் பெயர் பெறுகின்றன.

அர்த்த சாஸ்திரம் கூறுகின்ற அரசியல் கருத்தூக்கள் சிற்றரசுக்கு உரியவை என்றும் பேரரசுக்குரியன அன்று என்றும் கூறுவோர் உளர். எனினும் அறிஞர் தம் கருத்துப்படி கி. பி. 3ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட அரசு பற்றிய விளக்கத்தை எமக்குத் தருகின்ற சிறந்த நூலாக இது விளங்குகின்றது. குறிப்பாக மௌரியர் கால அரசு பற்றிய தகவல்களை இந்நூல் எடுத்துக் கூறுகின்றது,

### அரசன் முதலிடம்

அர்த்த சாஸ்திரத்தின்படி அரசன் முதலிடம் பெறுகின்றான். அவன் ஒப்புயர்வற்ற தலைவனாவான். அவனுடைய அதிகாரம் எல்லையற்றது. அவன் தர்மசாஸ்த்திரங்களை தேவையேல் ஏற்று ஆட்சி புரிதல் வேண்டும். அரசன் கடும் உழைப்பாளியாகவும், அரசியலில் கண்ணும் கருத்தும் உடையவனாகவும் இருத்தல் முக்கியம். அரச காரியங்களிலும் நிதி விடயத்திலும் சேனைகளை மேற்பார்வை செய்வதிலும், உளவு பார்ப்பவர்களை கண்காணிப்பதிலும் அவன் தீவிர கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

மன்னர்களுக்குரிய கல்வி பற்றி முதலாவது அதிகரணத்திலேயே அர்த்த சாஸ்திரம் விளக்கம் தருகிறது. சகல சாஸ்திரங்களையும் அரசன் கற்றிருத்தல் வேண்டும். வேதங்களையும் வேதாகமங்களையும் பல்வேறு வகைப்பட்ட தொழில் முறைகளையும் இராசநீதி, தண்டநீதி என்பன பற்றியும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

### மந்திரச் சுற்றம்

மன்னன் தனித்தியங்க முடியாது. அவன் தனக்குத் துணையாக அறிவுரை கூறும் பெரியோர்களையும், மந்திரிமார்களையும் சேனாதிபதி, தண்டத் தலைவன் போன்றோரையும் மந்திரச் சுற்றமாகக் கொண்டிருத்தல் வேண்டும். ஓர் அரசனது சிறப்புக்கு திருவள்ளுவர் கூறுவது போல் படை, குடி, கூழ் அமைச்சு, நட்பு, அரண் ஆதிய அங்கங்கள் ஆறும் முக்கியமானவை.

அதிகாரிகளை நியமிக்கின்றபோது தகுதி அறிந்து நியமிக்க வேண்டும். தகுதி பலவகையான சோதனைகள் மூலம் ஆராயப்படல் வேண்டும்.

மந்திரிமார்களை அடுத்து மந்திரி பரிஷத் என்னும் குழுவொன்று அரசனுக்கு ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்படல் வேண்டும். மந்திரச் சுற்றத்தை விட இவர்கள் அந்தஸ்

தில் சிறிது குறைந்தவர்கள். எந்த நடவடிக்கையில் ஈடுபடும் போதும் அரசன் எல்லோருடைய ஆலோசனைகளையும் பெறுதல் வேண்டும்.

### அதிகாரிகள்

அரசனுடைய கொள்கைகளை ஏற்று நடத்துவதற்கென தனித் தனி இலாகாக்கள் பல இருந்தன. ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒவ்வொரு தலைவன் இருந்தான். மேலும் பதினெட்டு உயர் அதிகாரிகள் அரசனுக்கு நிர்வாகத் துணை புரிய இருந்தனர்.

பதினெட்டு அதிகாரிகளின் பெயர்களும் பின்வருமாறு; மந்திரி, புரோகிதர், சேனாதிபதி, யுவராஜா, அரசவாயில் காவல் அதிகாரி, அந்தப்புர அதிகாரி, மாவட்ட அதிகாரி, வரி அறவிடும் அதிகாரிகளின் தலைவன், உள்நாட்டு அமைச்சன், உள்நாட்டு வரி அறவிடும் அதிகாரி, இரண்டாவது தளபதி, நகர நீதிபதி, அரச தொழிற்சாலைகளின் தலைவன், மந்திரி பரிஷத்தின் தலைவன், தண்டத் தலைவன், கோட்டைக் காவலன், எல்லைக் காவல் அதிகாரி, (அத்தபால) வனபரிபாலன அதிகாரி.

### நிர்வாகம்

மன்னனுடைய ஆட்சி அமைப்பில் இப் பதினெட்டு உயர் அதிகாரிகளும் முக்கிய பங்கு கொண்டனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் கீழ் பல உயர் அதிகாரிகள் நிர்வாகத்தை நடத்த உதவி புரிந்தனர். இவ்வுயர் அதிகாரிகளுக்குக் கீழும்பற்பல அதிகாரிகள் பணி புரிந்தனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய குறிப்புக்களும் அர்த்த சாஸ்திரத்தில் காணப்படுகின்றன. மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இவை இயங்க வேண்டும். ஒவ்வொரு இராச்சியமும் பல மாகாணங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு மாகாணமும் மாகாண அதிபதியினால் ஆளப்படும். மாகாண அதிபதி, அரசனால் நியமிக்கப்படுவான். இவன் அரசனின் உறவினனாகவே இருப்பான். ஒவ்வொரு மாகாணமும் பல மாவட்டங்களைக் கொண்டிருக்கும். இம் மாவட்டங்களை ''ஸ்தானிகர்'' எனும் தலைவர்கள் நிருவகித்து வந்தனர்.

ஒவ்வொரு மாவட்டமும் பல கிராமங்களைக் கொண்டிருக்கும். கிராமங்கள் கிராமத் தலைவர்களால் நிருவகிக்கப்படும். எல்லா அதிகாரிகளுமே அரசனால் நியமிக்கப்படுவர்.

### ஒற்றர் குழு

அரசின் அங்கங்களுள் ஒற்றர் குழு மிகவும் முக்கியமானது. அரசனுக்கு ஒற்றர்கள் உயிர் போன்றவர்கள். சொந்த நாட்டில் மட்டுமன்றி அந்நிய நாடுகளிலும் அரசனுக்கு ஒற்றர்கள் இருத்தல் வேண்டும். மிகவும் மதிநுட்பம் மிக்கவர்களே ஒற்றர்களாக நியமிக்கப்படுவார்கள். அந்தப் புரத்திலிருந்து அயல் நாட்டு அரசர்களுடைய அரச சபை வரை ஒற்றர்கள் இருத்தல் வேண்டும். பிராமண விதவைகளும், கணிகை மாதரும் கூட ஒற்றுத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டனர்.

### கோபா

நகர நிர்வாகம் சிறப்பாக அர்த்த சாஸ்திரத்திலே கூறப்படுகின்றது. தலை நகரம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு தலைவனின் (ஸ்தானிகன்) அதிகாரத்தின் கீழ் இருக்கும். இவனுக்குக் கீழ் ''கோபா'' என்றழைக்கப்படும் கணக்காளர்கள் பணி புரிந்தனர், இவர்களுக்குக் கீழ் நகரகர் என்றழைக்கப்படும் நகரக் காவலர்கள் (பொலீஸ் அதிகாரிகள்) நகரத்தைக் காவல் புரிந்து வந்தனர்.

நீதி பரிபாலனம் அரசனின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இருத்தல் வேண்டும். குற்றச் செயல்களுக்குக் கடும் தண்டனைகள் வழங்கப்பட்டன. தவறான தண்டனைகள் வழங்கப்பட்டால் வழங்குவதற்கு காரணமானவர்கள் தண்டனைக்குள்ளாக்கப் படுவர். போலி வைத்தியர்கள், கள்ள வணிகர்கள், கலப்படக்காரர்கள் கடும் தண்டனை பெறுவர்.

### சுங்க வரி

கடலிலிருந்தும், நதியிலிருந்தும் பெறக் கூடிய சுங்க வருமானம் பற்றியும் அர்த்த சாஸ்திரம் குறிப்பிடுகின்றது. மீனவர்கள், வணிகர்கள், பிரயாணிகள் ஆதியோரும் வரி செலுத்தல் வேண்டும். தோணிகள், பாதைகள் என்பன அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். துறைமுகங்கள் தோறும் கப்பல்களைக் கண்காணித்தும் பாதுகாப்பளித்தும் உதவும் அதிகாரிகள் பலர் இருப்பர். துறைமுகங்கள் அந்நியர்களின் வரவையும் செலவையும் கடுமையாகக் கண்காணிக்க வேண்டும்.

### மருத்துவம்

அர்த்த சாஸ்திரம், மருத்துவம் பற்றிய தகவல்களைத் தருகின்றது. இன்று இருப்பது போல் அன்றும் ''அம்புலன்ஸ்'' சேவை இருந்திருக்கின்றது. அறுவைச் சிகிச்சை மருத்துவர்களும், பெண் தாதியர்களும் இருந்தனர். அறுவைச் சிகிச்சைக் கருவிகளும், பலவகைப்பட்ட மருந்துகளும் அவை பற்றிய குறிப்புகளும் இந்நூலில் காணப்படுகின்றன

வீதியமைப்பு பற்றிய குறிப்புகளும் இந்நூலில் உள்ளன. சிறந்த வீதிகளை அமைத்துப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தல் அரசனுடைய தலையாய கடமையாகும். வீதிகளை கண்காணிப்பதற்கென தனியான ஒரு திணைக்களம் குறிப்பிடப்படுகிறது. பல வகையான வீதிகள் அவற்றின் அகலங்கள் அமைப்பு முறைகள் என்பன பற்றிய நுணுக்கமான விதி முறைகளும் கூறப்பட்டுள்ளன.

### காணிவரி

ஒரு நாட்டின் சிறப்புக்கு வருமானம் இன்றியமையாதது. பெரும்பாலான வருமானம் காணி வரி வசூலிப்பதற்கென தனித் திணைக்களம் குறிப்பிடப் படுகின்றது. இதன் அதிகாரி விவசாய மேலாளர். இவன் பயிர்களின் விளைவுக்கு ஏற்ற வரியை அறவிட்டான். பெரும்பாலும் 1/4 பங்கு அரசனுக்குரியது.

நீர்ப்பாசனத்துக்கென தனி வரி அறவிடப்படும் நகரங்களில் பெரும் பாலும் வியாபார நிறுவனங்களே வரி செலுத்த வேண்டும். எனினும் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்ட வரியை செலுத்துதல் வேண்டும். பொதுவாக 4 விகிதத்திலிருந்து 20 விகிதம் வரை வரி அறவிட வேண்டும். இறக்குமதிப் பொருட்களின் மீது கூடிய வரி அறவிடலாம். மதுவரித் திணைக்களம் மதுவரியை அறவிட்டது.

இவை தவிர சூதாட்ட விடுதிகளிடமிருந்தும், சுரங்கங்களிலிருந்தும், வெளிநாட்டுக்குச் செல்வோர் வருவோரிடமிருந்தும், உள்நாட்டுக்கு வருவோரிடமிருந்தும் வரிகள் வசூலிக்கப்பட்டன. நீதிமன்றங்களில் தண்டிக்கப்பட்டவர்கள் செலுத்திய பணமும் வருமானத்தைப் பெருக்க உதவியது. நாட்டின் தேவைக்கு நிதி போதாதெனில் புதிய வரிகளைப் புகுத்தி வருமானத்தைப் பெருக்குகின்ற உரிமை அரசனுக்கு உண்டு.

அரசன் தன்னுடைய பதவியைக் காப்பாற்றுவதற்காக எதுவும் செய்யலாம் என்ற கருத்துகள் அர்த்த சாஸ்திரத்தில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளன. பொய்க் குற்றச் சாட்டுகளைச் சோடித்துத் தான் விரும்பாத அதிகாரியை பதவி நீக்கவோ அல்லது கொல்லவோ அரசனுக்கு உரிமையுண்டு.

**பெண்கள்**

தனக்கு எதிரானவர்களைக் குற்றவாளிகளாக்கித் தண்டிப்பதற்காக அரசன் பெண்களைப் பயன்படுத்தலாம். அவ்வாறே தனக்கு எதிராக இருப்பவர்களுடைய நட்பைப் பிரிப்பதற்கும் பெண்களைப் பயன்படுத்தி அவர்களை அழிக்கலாம். அரசன் எவ்வகையான தண்டனையை வழங்கினாலும் அதை எதிர்த்துக் கேட்கும் உரிமை யாருக்கும் இல்லை. மேலும் தேவை ஏற்பட்டால் இறைவனின் பிரதிநிதி தானே யென்று கூறி மக்களை நம்பவைத்து தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றலாம். பகையரசர்களையும் இவ்வாறு சூழ்ச்சி மூலம் கொல்லலாம்.

பணம் சேர்ப்பதற்கும் அரசன் எந்த நடைமுறையையும் கையாளலாம். இக் கருத்துக்கள் தர்ம சாத்திரங்களுக்கு முரணானவையான போதும், அர்த்த சாஸ்திரம் சரியெனக் கூறுவது புதுமையானதாகும். சாணக்கியர் தமது நூலில் இந்த அறிவுரைகளையும் கூறத் தவறவில்லை. படையெடுப்பு, யுத்தம், சமாதானம் என்பன பற்றியும், அவற்றை எவ்வாறு கையாளலாம் என்பது பற்றியும் ஆராய்கின்றார். கானகத்தில் வேட்டையாடுதல், சூதாடுதல், காமலோலனாய்த் திரிதல், மதுபோதையில் மயங்குதல் ஆதியனவற்றால் வரும் தீங்குகள் ஆராயப்பட்டுள்ளன.

**வர்ணாச்சிரம தர்மம்**

வர்ணாச்சிரம தர்மத்தை அர்த்த சாஸ்திரம் ஆதரிக்கின்றது. ஒழுங்கு பிசகுகின்ற பொழுது வர்ணக் கலப்பு ஏற்படுகின்றது. இவ்வொழுங்கு பிசகாமல் அரசன் காப்பாற்றுதல் வேண்டும். ஒழுங்கை நிலை

நாட்டுவதற்கு அரசன் எந்த வழிகளையும் கடைப்பிடிக்கலாம். பாதகமான செயல்களில் கூட ஈடுபடலாம். இதனையே இத்தாலிய அரசியல் அறிஞரான மாக்கிய வல்லி என்பவரும் குறிப்பிட்டுள்ளமை ஆராய்தற்குரியது.

அரசன் மக்களுடைய தொண்டன் என்பதை அர்த்த சாஸ்திரம் ஏற்றுக் கொண்ட போதும் ஜனநாயகம் பற்றிய எவ்வித குறிப்புக்களும் இந் நூலில் காணப்படவில்லை. எதேச்சாதிகாரத்தையே ஆதரிக்கின்றது.

**ஆசிரியர்**

சாணக்கியர் தமது நூலில் பல ஆசிரியர்களை பிரமாணமாகக் கூறுவர். ஒழுக்கமும் கடமையும் முக்கியமானவை. இவற்றையே தர்ம சாஸ்திரங்கள் வலியுறுத்தும், தர்ம சாஸ்திரங்கள இலட்சிய அடிப்படையைக் கொண்டவை. ஆனல் அர்த்த சாஸ்திரமோ அரசனின் அபிலாசைகளைப் பேணிப் பாதுகாக்க முயற்சிக்கின்றது. எனவேதான் அர்த்த சாஸ்திரத்துக்கும் தர்ம சாஸ்திரத்திற்கு மிடையே முரண்பாடுகள் ஏற்படும் போது அர்த்த சாஸ்திரத்தை விடுத்துத் தர்ம சாஸ்திரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மனு, யாக்ஞவல்கியர், விஷ்ணு ஆகிய ஸ்மிருதி ஆசிரியர்கள் கூறுவது சிந்திக்கத் தக்கது. ✻




படம்: ''ஆதவன் எழுகிறன்'' அறிமுக விழாவில் நிர்வாக ஆசிரியர் திரு. ந. அமிர்தலிங்கம் உரையாற்றுகின்றர். இடமிருந்து வலமாக ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், திரு. இ. ஜெயராஜ் திரு. க. சொக்கலிங்கம், திரு நா. குழந்தைவேலு, திரு. ஜோசப் பாலா, புலவர் ஈழத்து சிவானந்தன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

# நல்லை நகரில் அறிமுக விழா

தொகுப்பு: உதயன் (24-06-1988)
வீரகேசரி (30-06-1988)

ஈழத்துச் சஞ்சிகைகளில் அறிவியற் கட்டுரைகளை மாத்திரம் பிரசுரிப்பதோடு நில்லாமல் ஆக்க இலக்கியங்களுக்கும் அதிமுக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இதனால் புதிய தலைமுறையினரால் சமூகத்திற்கும் பயன் தரக்கூடிய இலக்கியங்களைப் படைக்க வழிபிறக்கும்,

இவ்வாறு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆதரவில் நடைபெற்ற ''ஆதவன் எழுகிறான்'' கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகை அறிமுக விழாவில் அறிமுகவுரையை நிகழ்த்திய எழுத்தாளர் சொக்கன் கூறினார்.

வேலணை பெரும்பாக உத்தியோகத்தரும் தமிழ் விரிவுரையாளருமான திரு. நா. குழந்தைவேலு தலைமையில் நடைபெற்ற விழாவில் சொக்கன் தொடர்ந்து பேசுகையில் ஆதவன் எழுகிறான் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் மக்களுக்குப் பெரிதும் பயன் தருபவைகள். குறிப்பாக மாணவர்கள்சமூகத்திற்கு உகந்த முறையில் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டது. வரவேற்கப்பட வேண்டியதாகும் என்றார்.

புலவர் ஈழத்து சிவானந்தன் பேசுகையில் நமது பிரதேசத்தில் சஞ்சிகை வெளியிடும் பணி மிகவும் கஷ்டமான ஒன்றாகும். இப்பணியில் துணிவுடன் இறங்கியுள்ள இளைஞர்களுக்கு மூத்த எழுத்தாளரும் ஆர்வலர்களும் இயன்றவரை ஊக்கம் கொடுக்க வேண்டும் என்றார். அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ கருத்துரையாற்றுகையில், ''சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்று சொல்லிச் சொல்லியே எமது சமுதாயம் இளைஞர்களின் முயற்சிகளை தடைபண்ண முயல்கின்றது. இலக்கியம் என்பது வயது வந்தவர்களுக்குத்தான் என்ற நிலைமாறி இளைஞர்கள் இலக்கியம் படைக்க முன் வந்திருப்பது வரவேற்கத் தக்கது இளைஞர்கள் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். அவர்களது பயமும், பலவீனமும் அதுதான்.

யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் பேசுகையில் நாம் பல நூல்களைக் கற்று ஆராய்ந்து பெறும் அறிவு என்றும் எம் மனதில் பசுமையாக இருக்கும். அனைவரும் ஊக்கத்துடன் உழைத்து அறிவை வளர்க்க முன்வர வேண்டும் என்றார். ✻

# அவதார
# புருஷர்
# நாவலர்

செல்வி. ந. ஜெயந்தி

அவதரிப்பு: 18-12-1822 இறை பதம்: 05-12-1879

நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேற்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே — எல்லவரும்
ஏத்து புராணுகமங்களெங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை — சி. வை. தா

தந்தையார்: யாழ்ப்பாணத்து நல்லூர் கந்தப்பிள்ளை

தாயார்: யாழ்ப்பாணத்து நல்லூர் சிவகாமி

இட்ட பெயர்: ஆறுமுகம்பிள்ளை

ஆரம்பக் கல்வி: நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர்

குருகுலக்கல்வி: சேனுதிராய முதலியார், சரவண முத்துப் புலவர் ஆகியோரிடம்நன்னூல், இரகுவம்சம், திருவள்ளுவர், திருக்கோவையார், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலியன கற்றல்.

ஆங்கிலக் கல்வி: பீற்றர் பார்சிவல் பாதிரியாரிடம் பெற்றமை.

தெரிந்த மொழிகள்: தமிழ், ஆங்கிலம், சமஸ்க்ருதம்.

சிறப்புப் பட்டம்: நாவலர், வசனநடை கைவந்த வல்லாளர், பரசமய கோளரி, அஞ்சா நெஞ்சம் படைத்த விறல் வீரர், ஐந்தாம் குரவர்.

துண்டுப் பிரசுரங்கள்: வச்சிரதண்டம், சுப்பிரபோதம் முதலிய துண்டுப் பிரசுரங்களும், சைவ தூஷண பரிகாரம், மித்தியாவாத நிரசனம் முதலிய கண்டன நூல்களும் அவ்வப்போது வெளியிட்டமை.

அச்சிற் பதித்த முக்கிய நூல்கள்:
பெரியபுராண வசனம், முதலாம் இரண்டாம் பாலபாடம், திருமுருகாற்றுப்படை யுரை, சிவாலய தரிசன விதி, கந்தலரங்காரம், கந்தரனுபூதி, உபநிடத வுரை, சைவவினுவிடை, சிவகவசம், விநாயகர் கவசம், திருவள்ளுவர் பரிமேரழகர் உரை, கந்தபுராணம், யாழ்ப்பாணச் சமயநிலை, நன்னூல் காண்டிகையுரை முதலியனவாம்.

தமிழ் வாழச் சைவம் வாழ அவதரித்தவர். சமயகுரவர் நால்வருக்குப் பின் சைவமும் தமிழும் வளர்த்த பெரியார். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் ஓர் அவதார புருஷர், இடையிருட் கடைக் காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளி போலத் தளருஞ் சைவமும் தமிழும் தழைக்க அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வல்லாளராவார். முன்னே பல காலங்களிலும் தமிழகத்தில் இருந்து தான் பெற்ற சிறு நன்மையினை வட்டியுடன் பெருக்கி ஒரு காலத்து ஒருமுகமாக பழங் கடனைத் தீர்த்து என்றுந் தீர்க்கொணுதவாறு தமிழகத்தை ஈழநாட்டிற்கு கடமைப் படுத்திய பேருபகாரி நாவலர் என்முல் மிகையாகாது. கற்றலும் கற்பித்தலுமே நாவலருக்கு வேலை. கல்வியில் பழமை பேணும் பண்பையே போற்றினுர். முந்திய தலைமுறை ஈட்டிய அறிவை எறிந்துவிடுதல் பேரிழப்பு என்னும் கருத்தைக் கொண்டிருந்தார்.

''யாதாயினும் நாடாமல் ஊராமல்
என்னெருவன் சாந்துணையும் கல்லாதவாறு''

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்நாழ் முழுவதும் கல்வியெனும் கோட்பாட்டைக் கொண்டிருந்தார். இவரது 19 வயதிலேயே இருமொழித் திறமையைக் கண்ட பேர்சிவல் பாதிரியார் தமது பாடசாலையில் தமிழ் ஆங்கில உபாத்தியாயராகவும் தமக்கு தமிழ் பண்டிதராகவும் அமர்த்திக் கொண்டதோடு பைபிளைத் தூய தமிழில் மொழி பெயர்க்கவும் செய்தார். சென்னையில் இருந்த அறிஞர்கள் மொழிபெயர்ப்பினும் நாவலரது மொழிபெயர்ப்பே சிறந்ததெனவும் யாழ்ப்பாணத்து மண்ணில் இவ்வளவு சிறந்த தமிழ் உண்டா என அவர்களை ஆச்சரியப் பட வைத்தவராவார்.

கிறிஸ்தவ மத பரம்பலைத் தடுப்பதற்காக 1849 – ம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு சுக்கிரவாரத்திலும் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வசந்த மண்டபத்தில் நியமமாக பிரசங்கம் செய்து வந்தார். இவரது நாவன்மையால் பல இடங்களிலிருந்தும் பிரசங்கம் கேட்க பிராமணர்கள், வித்துவான்கள், பிரபுக்கள் என்னும் பல திறத்தாரும் வருவாராயினர். கடவுள் வாழ்த்து, வேதாகமம், திருவிழா, யாக்கை நிலையாமை, மகளிரொழுக்கம், தருமம் முதலியன அவர் செய்த பிரசங்கங்களில் சிலவாகும். 27 வது வயதில் திருவாவடுதுறை ஆதீனத்தார் இவரது பிரசங்கத்தைக் கேட்டு ''தேருந் தோறுந் மினிதாந் தமிழ்'' என்றபடி கேட்கும் தோறும், கேட்குந் தோறும் தெவிட்டாதபடி இருந்தமையால் அவருடைய வாக்கு வல்லபத்தை வியந்து அவரது இயற்பெயருக்குப் பின் ''நாவலர்'' என்னும் திவ்விய நாமத்தை சூட்டினுர்கள்.

சைவப் பிள்ளைகள் படிப்பதற்கென 1871 - ல் வண்ணார்பண்ணையிலே சைவப் பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து கந்தர்மடம், கோப்பாய், மாதகல், இணுவில், பருத்தித்துறை ஆகிய இடங்களிலும் சைவ வித்தியாசாலைகள் தோன்றின. நாவலர் சிதம்பரத்திலும் ஒரு பெரிய சைவ தாபனத்தை நிறுவ வேண்டு மென்று கனவு கண்டார். அதற்குத் தேவையான பெருந்தொகைப் பணத்தை சேகரிக்க முடியாமையினால் யாழ்ப்பாணத்திலே நிறுவியது போன்று ஒரு பாடசாலையே அங்கும் நிறுவினார். 1872 - ல் வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கில வித்தியாசாலையை ஆரம்பித்தார். அப்பாடசாலை நிதிவசதி இன்மையாலும் அரசாங்கப் பரீட்சை நடாத்தப்படாததாலும் நான்கு ஆண்டுகளில் நிறுத்தப்பட்டது. எனினும் நாவலர் தொடக்கி வைத்த கல்விப் பணியானது அவரின் காலத்துக்குப் பின்பு பல தடைகளை நீக்கி வெற்றிப் பாதையில் நடந்தது என்பதற்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலிய சைவ சமயக் கல்வி நிறுவனங்களே சான்றாகும். நாவலரது கல்விப்பணி, ஆசிரியப்பணி, சமயப்பணி, நூலாசிரியப்பணி பாடசாலைகளை நிறுவும் பணி என விரிவடைந்து செல்கிறது. நாவலரது கற்பித்தல் பாடசாலையோடு நில்லாமல் தம்மை நாடி வந்த பலருக்கு சமய சாஸ்திரங்களையும், தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்பித்து வந்தார். இவரின் மாணவர்களுள்ளே காசிவாசி செந்திநாத ஐயர், வித்துவ சிரோமணி பொன்னம்பலம்பிள்ளை, த. கைலாசபிள்ளை, உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை ஆகியோருடன் அவருடைய வாரிசாக இன்று வரை விளங்கி மறைந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

அக்காலத்தில் பாதிரிமார் சைவாலயங்களில் நடைபெற்ற கிரியைகளையும், ஆடம்பர விழாக்களையும் கண்டித்ததோடு நில்லாமல் சைவசமயத் தெய்வங்களையும் பலவாறு பழித்தனர். சுப்பிரமணிய சுவாமி இரு மனைவியரைக் கொண்டதேன்? சரீரம் கொண்டு பிறந்ததேன்? என்று வினாக்கள் பலவற்றைத் தொடுத்தனர். இவ்வியல்புடையவரை முற்றறிவுடைய கடவுளாகக் கொண்டு வழிபடல் தகாது எனவும் பாதிரிமார் பிரசாரம் செய்தனர். இதற்குப் பதில் சொல்லும் விதத்தில் சுப்பிரமணியக் கடவுள் வரம்பிலின்பம், இயற்கையறிவு, தன் வயமுடைமை குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என்னும் ஆறு குணங்களுமே ஆறு திருமுகங்களாகவும், மற்றைய அருட்குணங்கள் மற்றைய அவையங்களாகவும் அமையப் பெற்ற அருட்திருமேனியெனவும், அவருடைய பன்னிரு திருக்கரங்களிலுள்ள படைக்கலங்களாகிய தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி. தாமரை, தண்டம், வில், மழு, என்னும் பதினொன்றும் பதினொரு உருத்திரரெனவும், வேலானது இப்பதினொரு ஆயுதங்களுக்கும் மேலாகிய ஞானசக்தி யெனவும், அவருடைய தேவிமாராகிய தெய்வநாயகி, வள்ளிநாயகி அவருடைய கிரியாசக்தி, இச்சாசக்தி

எனவும் சாதிக்கின்ற ''சுப்பிரபோதம்'' என்னும் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார்.

நல்லூர் கந்தசுவாமி கோவிற் கிரியைகள் சிவாகம விரோதமென்று கண்டு அக்கோயிலுக்கு போகாது விடுத்தார். அக்கோயிலார் கோயிலை சிவாகம முறைப்படி திருத்துவதற்கு நாவலரை அழைத்தனர். கோயில் திருப்பணிச் சபையில் ஒருவராக இருந்து கருங்கல்லால் கோயிலைத் திருத்தியமைக்க உதவினுர். ஒரு முறை தேர்த்திருவிழாவில் கலந்து கொள்ள நாவலர் அவர்களை அழைத்தபோது ''உங்கள் கோயிலிலே; கிராம சாந்தியிலும், தேர்த் திருவிழாவிலும், வைரவர் பூசையிலும் ஆடு வெட்டுவதனுல் நான் கோயிலுக்கு வரேன்'' என்று மறுத்தார். இனி ஒரு போதும் அப்படி நடவாது என வாக்குறுதி அளித்த பின் சென்ருர். சில வருடங்களின் பின் அது தொடர்வதை அறிந்து முருகக் கடவுளின் பூசை உற்சவத்திற்கும் குமாரதந்திரத்திற்கும் விரோதமாதலால் அன்று தொட்டு நல்லூருக்குப் போகாது விட்டார். தென் இந்தியாவில் சிதம்பரம் கோயிலில் நடராசப் பெருமானுக்கு பூசை செய்யும் ''தீட்சிதர்''களின் ஒழுங்கீனங்களைக் கண்டு கொதித்து எழுந்து கண்டனங்கள் தொடுத்தார்.

இந்தியாவிலே கருங்குழி இராமலிங்கபிள்ளை யென்னுமொருவர் தாம் சிவானுபூதி பெற்றவரென்றும் ஓதாது உணர்ந்தவரென்றும் கூறி சமய குரவர்களது அருட் பாக்களைத் தள்ளி தாம் செய்த பாக்களை ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசைகளிலும் பாராயணம் பண்ணும்படி செய்தார். இவற்றைச் சகிக்க முடியாத நாவலர் பல சனங்களெதிரே தேவார திருவாசகம் முதலியன பசு கரணம் நீங்கிச் சிவகரணம் பெற்ற நாயன்மார்களாலே அருளிச் சொயப்பட்டன என்றும் இவைகளே சிவாலய நித்திய நைமித்தியங்களிலும் ஓதத் தகுந்தன வென்றும் சிவரகசியத்திலே கூறப்பட்டிருக்கும் பிரமாணங்களைக் காட்டி பிரசங்கித்தார்.

1877-ம் ஆண்டில் மழையில்லாமல் நெல் விளைச்சல் அருகிப்போன போது கடும் பஞ்சம் உண்டானது. ஏழைகள் சாப்பாடு கிடைக்காமல் துன்புற்ற வேளையில் தனது பொருளைக் கொண்டுப், தனவந்தர்களின் உதவிகளைச் சேகரித்தும் பஞ்சம் நீங்கும் வரை கஞ்சித் தொட்டி ஏற்படுத்தி கஞ்சி வார்க்க உதவி செய்தார்.

அக்காலத்தில் இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்தது. கவர்ணரே சர்வாதிகாரி. சட்ட நிரூபண சபை ஒன்றை ஏற்படுத்தி அச் சபைக்கு சுதேசப் பெருமக்கள் சிலரைத் தெரிவு செய்து ஆலோசனைகளைப் பெற்று வந்தார். 1878-ம் ஆண்டு தேர்தல் போட்டியில் அக் காலத்தில் செல்வாக்கு மிக்க அப்புக்காத்து பிறிற்ருேவும், சேர். பொன்.

இராமநாதனும் போட்டியிட்டார்கள். பிறிற்ருேவை ஆதரிப்போரே அதிகமாக இருக்க நாவலர் அவர்கள் இராமநாதனுக்கு ஆதரவாக இருந்தார். இராமநாதனின் பக்கம் நாடி விழுந்துபோன நேரம் நாவலரின் முயற்சியால் தமிழ் மொழியின் கம்பீரம் பிரகாசித்தது. நீதி தலை நிமிர்ந்தது. இராமநாதன் சட்ட நிருபண சபைக்கு தெரிவு செய்யப்பட்டார். மூடத்தனமான சாதிக்கட்டுப்பாடுகள் புழுங்கிக் கொண்டிருந்த காலத்தில் ''சாதியிலும் சமயமே அதிகம். சமயத்திலும் சாதியதிகமென்று கொள்வது சுருதி, புத்தி, அனுபவம் மூன்றிற்கும் முழுமையும் விரோதம்'' என்று! எக்காலத்துக்கும் ஏற்ற சீர் திருத்தக் கருத்தைக் கூறி நீதி செய்தவர் நாவலர். திருக்கேதீஸ்வரத் திருத்தலம் வழிபடுவோரின்றி பழுதடைந்த காலத்தில் ''மாதோட்டத்தில் தேன் பொந்து ஒன்று உள்ளது எல்லோரும் அங்கே சென்றடையுங்கள்'' என்று கூறி அதன் பழம் பெருமையை உணர்த்தி புனருத்தாரணம் செய்ய வகை செய்தார். சைவசமயத்தின் மேன்மை குன்றிய அக்காலத்தில் நாவலர் பிறந்தது சைவசமய தமிழ் மக்களின் பேறுகும். கும்பகோணம் பூ. முருகேசம் பிள்ளை நாவலர் மறைந்த பின் பாடிய பாடல் நெஞ்சை தொடுவதாக உள்ளது.

ஆறுமுக நாவலனை ஆருமுணராப் பொருளைத்
தேறு முகங் கொண்டு தெளிந்தானை — ஆறுமுகம்
என்றிருக்க ஓர் முகமும் எங்களுக்குத் தோன்றுமல்
சென்றொளித்தானந்தோ சிவா.
வாழ்க நாவலர் நாமம்! வளர்க சைவமும்தமிழும்!!


வடமாகாணத்தில் நீண்டகால கல்விச் சேவையினை வழங்கும்
தனித்துவமான நிறுவனம்!

BITSMANS INSTIUTES
MANIPAY.

G. C. E. A / L (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்.)
G. C. E. O / L (Day & EVENING CLASS)

ஆண்டு 10, 9, 8, 7. 6, யாவும் திறமையான
பட்டதாரி ஆசிரியர்களினுல் கற்பிக்கப்படுகின்றது.

- திறமை மிக்க பட்டதாரி ஆசிரியர்கள்
- திறமையான நிர்வாகம்
- அதிசயிக்கத் தக்க பெறுபேறுகள்
- நம்பிக்கையான நிறுவனம்

இவற்றின் மையம்.

BITSMANS INSTIUTES - MANIPAY.

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான படங்களுக்கு



## பேபி போட்டோ

படப் பிடிப்பாளர்

சேர். பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

"AATHAVAN ELUGIRAN" PROGRESSIVE QUARTERLY
MAGAZINE

# விக்னு

டியூசன் சென்ரர்,
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே ஸ்தாபனம்)

க. பொ. த. (உயர்தரம்), க: பொ. த. (சாதாரணதரம்) வகுப்புகள் சிறப்பாக நடைபெறுகின்றன,

எமது தனித்துவம்வாய்ந்த ஆசிரியர் குழு;

| | |
|---|---|
| பொருளியல் | திரு. கிருஷ்ணனந்தன் |
| வர்த்தகம் | திரு. லங்கா |
| கணக்கியல் | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | திரு. குணராசா |
| அரசறிவியல் | திரு. மஃறூப் |

முக்கிய குறிப்புகள்:

1) வகுப்புகள் வாரத்தில் ஐந்து நாட்களும் நான்கு பாடங்களும் நடைபெறும்.

2) கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம்வாய்ந்த ஆ[illegible]கள் ஒருங்கிணைந்து நடாத்தப்படும் ஒரே ஸ்தாபனம்.

இச் சஞ்சிகை வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களின் ஆதவன் செயலவையால் யாழ்ப்பாணம் மணியோசை அச்சகத்தில் அசசிட்டு வெளியிட[illegible]ட்டது.